22 MAY 197

# தேர்தல் கடமைகள்: உத்தியோகத்தருக்கு தபாலில் விபரம்

Registered as a NewsPaper in Ceylon
விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 97
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 5 ரபி. அவ் 12 செவ்வாய்க்கிழமை [19-5-70]

**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப்பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| 1 வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற்பணம் கட்டவேண்டும். தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம், செவ், தேர்தல் தினத்தன்று கடமையாற்றவிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் கடமைகள் பொறுப்புகள் பற்றிய விபரங்கள் தபாலில் அனுப்பப்பட்டு வருகின்றன. அதே சமயம் தேர்தல் தினத்தன்று இவர்கள் எங்ஙனம் பணியாற்றவேண்டும் என்பது பற்றியும் பயிற்சிகள் அளிக்கப்பட்டுவருகின்றன.

தேர்தல் கடமையில் ஈடுபடும் உத்தியோகஸ்தரின் பொறுப்புச் சம்பந்தமான விபரங்கள், அவர்கள் கடமையாற்ற வேண்டிய நிலையங்கள், இது சம்பந்தப்பட்ட ஏனைய விபரங்கள் ஆதியன அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

தபால் மூலம் வாக்களிப்பவர்களுக்கான வாக்குச் சீட்டுக்கள் உரியவர்களுக்கு அனுப்பப்பட்டு விட்டன. 24-ம் திகதிக்கு முன் தபால் மூலமான வாக்கை அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. தொடர்ந்து ஓய்வு நாட்கள் வருவதால் தபால் மூலம் வாக்களிப்பவர்களுக்குத் தடங்கல் ஏற்படாத வகையில் விசேஷ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

## மரத்தால் விழுந்தவர் ஆஸ்பத்திரியில் மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஒரு மாதத்திற்கு முன்பு கரவெட்டிப் பகுதியில் தென்னைமரத்தில் இளநீர் பறிக்கையில் விழுந்து யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஆழ்வான் சின்னத்தம்பி (22) நேற்று காலமானார்.

மரணவிசாரணையதிகாரி திரு என். இராசநாயகம் விசாரணை செய்து விபத்தினால் ஏற்பட்ட மரணம் என்று தீர்ப்பளித்துள்ளார்.

'சிங்கள மக்கள்

## ஒற்றை ஆட்சி என்றதும் முதுகில்தட்டி அணைக்கிறார்கள்'

அல்லைப்பிட்டி, திங்கள்

இன்று தமிழினம் இரண்டாந்தரப் பிரஜையாக இந்நாட்டில்வாழவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை மாற வேண்டுமாயின் சிங்கள சகோதரர்களுடன்சேர்ந்து பாடுபடவேண்டும். அதற்காகவே தமிழ்க்காங்கிரஸ் கட்சி அன்றும் இன்றும் பாடுபட்டுவருகின்றது.' என ஊர்காவற்றுறையில் நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் கூட்டமொன்றில் பேசும்போது தீவுப்பகுதி வேட்பாளர் நா. த. சிவஞானம் குறிப்பிட்டார். திரு. சிவஞானம் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

''நாங்கள் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் நிறுவும்படி அரசினரைக் கேட்டு அவர்கள் யாழ்ப்பாணத்தில் அமைக்க முற்படும் வேளையில் தமிழரசுக்கட்சியினர். அதைத்தடுத்து திருமலையில் தான் நிறுவவேண்டுமென ஒரேபிடியாய் நின்றுவிட்டார்கள். அதனால் பல்கலைக்கழக விஷயம் தடைப்பட்டுவிட்டது. எனவே மீண்டும் எமது கட்சியினரைத் தெரிவுசெய்வீர்களானால் நிச்சயமாக யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் கிடைக்கும். தமிழ் பேசும் மக்கள் மீண்டும். முன்பு விட்ட பிழைகளை இனிமேலும்விடாமல் ஒரே குரலில் தமிழ்க்காங்கிரஸ் கட்சியினரையே ஆட்சிமன்றத்துக்கு அனுப்பி வையுங்கள் தமிழரசுக்கட்சியினர். கூறும் சமஷ்டி ஆட்சிமுறை நமது நாட்டிற்கு உகந்ததல்ல, இங்கு பெரும்பான்மையானவர்கள் சிங்கள சகோதரர்களே ஒற்றையாட்சிமுறைதான் நமது நாட்டிற்கு அத்தியாவசியமானது. சமஷ்டி ஆட்சிமுறைதான் அமைக்கவேண்டுமென சிங்களவர்களிடம் கேட்கும்போது அவர்கள் கோபமடைகின்றார்கள். ஒற்றையாட்சிதான் நல்லமுறையென நாங்கள் கூறும்போது அவர்கள் எங்களை முதுகில் தட்டி அணைக்கின்றார்கள்''

# வாக்களிப்பு தினத்தில் சொந்த வாகனங்கள் மீதும் கண்காணிப்பு

## இயன்றவரை பஸ் ரயில் சேவையைப்பயன்படுத்துங்கள்

### பொலிசார் கூறும் ஆலோசனை

யாழ்ப்பாணம்'செவ்வாய்

தேர்தல் வாக்களிப்புத்தினமான இம்மாதம் 27ந் திகதி சொந்தவாகனங்களைவைத்திருப்போரும்கூட வாடகை வாகனங்களைப் பயன்படுத்தி உண்மையிலேயே தங்கள் சொந்த அலுவல்களைக் கவனிக்கவேண்டிய அவசியமிருந்தாலும் கூடியவரையில் சொந்தவாகனங்களையும் வாடகை வாகனங்களையும்உபயோகிக்காமல் இருப்பதன் மூலம் தேர்தல் சட்டவிதிகளைச் சரிவர அமுல் செய்வதற்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிக்குமாறு வடபகுதிப் பொதுமக்களை வடபகுதி பொலிஸ் அதிபர் கேட்டுள்ளார்.

உண்மையாகவே தமது சொந்த அலுவல்களுக்காக ஒருவர் தமது சொந்தவாகனத்திலோ அல்லது வாடகைவாகனத்திலோ சென்றாலும் அந்த வாகனத்தைத் தடுத்து நிறுத்திப் பொலிசார் [illegible]. வாக்காளர்களை ஏற்றிச் செல்வதற்கு அந்தவாகனம் [...]

வாகனத்தை அன்று முழுவதும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்க பொலிசாருக்கு உரிமையுண்டு. தேர்தல் முடிந்த பின்னர் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு [...] வாகனம் [...] ஏற்றி இறக்கப்பயன் படுத்தப்பட்டதுஎன நிரூபிக்கப் [...]

கப் பயன்படுத்திக் கொள்ள முனையக் கூடுமென்பதால் வாகனங்கள் பம்பந்தமாக பொலிசார் தீவிர கண்காணிப்புச் செலுத்தவிருக்கின்றனராம்.

## பஸ்மோதி தபால் ஊழியர் ஸ்தலத்தில் மரணம்

முல்லைத்தீவு, திங்கள்

இ. போ. ச. பஸ் ஒன்று மோதியதால் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமானார். இப்பரிதாப சம்பவம் முல்லைத்தீவு — மாங்குளம் றூட், 18-ம் கட்டையில் நடந்தது.

ஒட்டி சுட்டான் தபால் நிலையத்தைச் சேர்ந்த தபால் விநியோகஸ்தரான இராமலிங்கம் சங்கரப்பிள்ளை என்பவரே இவ்விதம் விபத்தில் மரணமானவராவர். செய்தியறிந்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் பஸ்சாரதியான கே. நடராசா என்பவரைக் கைதுசெய்து காவலில் வைத்துள்ளனர். தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது.

## 'திருமலையில் யு.என்.பி. தமிழரையேபயன்படுத்துகிறது'

திருக்கோணமலை, திங்கள்

திருக்கோணமலை மண்ணைக் காப்பாற்ற வேண்டிய தலையாயபொறுப்பு. தமிழர்களாகிய எங்களிடம் இருக்கின்றது. வகுப்புவாதிகளின் எண்ணங்கள் நான் உயிரோடு இருக்கும்வரை இந்த மண்ணில் நடைபெற முடியாது''

மைகளை மறந்து ஒற்றுமையோடு நமது உரிமைகளைப் பெற வாதாட வேண்டும் என்றூர்.

வழக்கறிஞர் பி. சம்பந்தர் இக்கூட்டத்தில் பேசியதாவது:

'இன்று ஒரு தமிழனையே நிறுத்தி இப்பூமியைப் பறிக்க நினைக்கும் ஐக்கிய [...]

இந்தியலோக்சபையில்

## ராஜமான்ய ஒழிப்பு மசோதா தாக்கல்

புதுடில்லி, மே 18.

முன்னாள் மன்னர்களின் மானியங்களை ஒழித்து விடுவதற்கான மசோதா இன்று இந்திய லோகசபையில் தாக்கல் செய்யப்கட்டது.

முன்னாள் சமஸ்தான மன்னர்களின் வாரிசுகளுக்கு இந்திய அரசியல் சாஸனத்தில் கொடுக்கப்பட்டுள்ள விசேஷ சலுகைகள், உரிமைகள் சம்பந்தமாக இரண்டு ஷரத்துக்களை ரத்து செய்வதற்கு அனுமதிகோரி இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மசோதாவை சபையில் சமர்பிப்பதா இல்லையா? என்பதுகுறித்து முதலில் குரல் வாக்கெடுப்பின் மூலம் உள்துறை மந்திரி சவான் அனுமதி பெற்றூர் மசோதாவை ஆலோசிப்பதற்கு ஆட்சிமன்றத்துக்குத்தகுதி கிடையாது என்று பல அங்கத்தவர்கள் ஏட்சேபம் தெரிவித்தார்கள். இந்த மசோதாவை ஆலோசிப்பதற்கு பூரண தகுதி உண்டு என்று சபாநாயகர் திருதில்லோன் தெரிவித்தார்.

## 'எனது கட்சியை அழிக்கவே[...]

## 'சிறுபான்மையினருக்கு [...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையாயபொறுப்பு. தமிழர் களாகிய எங்களிடம் இருக்கின்றது. வகுப்புவாதிகளின் எண்ணங்கள் நான் உயிரோடு இருக்கும்வரை இந்த மண்ணில் நடைபெற முடியாது''

பன்குளத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் தமிழரசு திருக்கோணமலை வேட்பாளர் திரு. பா. நேமிநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

இக்கூட்டத்துக்கு திரு. காளிக்குட்டி தலைமைதாங்கினார். திரு. நேமிநாதன் தொடர்ந்து பேசுகையில், 'தமிழினம் இந்நாட்டில் சுதந்திரமாகவும் உரிமையோடும் வாழ வேண்டுமென்றால் நாங்கள் வேற்று

என்றார்.

வழக்கறிஞர் பி. சம்பந்தர் இக்கூட்டத்தில் பேசியதாவது:

'இன்று ஒரு தமிழரையே நிறுத்தி இப்பூமியைப் பறிக்க நினைக்கும் ஐக்கிய தேசியக்கட்சி அடுத்தமுறை ஒரு சிங்களவரைத் தனது வேட்பாளராக நிறுத்தி இந்நிலத்தில் சொந்தம் கொண்டாடவரும். தமிழ்மக்கள் சிந்தித்து இப்புனித பூமியைக் காப்பாற்றக்கூடிய வல்லமை படைத்த ஒரு பிரதிநிதியை ஆட்சிமன்றம் அனுப்ப வேண்டும். எமது திருக்கோணமலை மண்ணைக் காப்பாற்றுகின்ற திறன் திரு. பா. நேமிநாதனிடம் உண்டு.

# 'இனப்பிரச்னையைத் தீர்க்க சமஷ்டியே சிறந்த மருந்து'

அல்லைப்பிட்டி, திங்கள்

''ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள்வாழும் சகலஇனங்களுக்கிடையேயும், சம அந்தஸ்தும், சமவாய்ப்பும் அளிப்பதுதான் சமஷ்டியாட்சியாகும். இதை எதிர்ப்பவர்கள் அரசியல் தெரியாதவர்களென்றே கூறுவேன்' எனபண்டிதர்கா. பொ. இரத்தினம் வேலணை மேற்கில் நடைபெற்றகூட்டமொன்றில் பேசுகையில்கூறினார். இக்கூட்டத்தில் திரு. இரத்தினம் மேலும்பேசுகையில், ''சமஷ்டி ஆட்சியின் கீழ் ஒரு இனம் உயர்ந்ததாகவும் மற்றோர் இனம் தாழ்ந்ததாகவும் கருதப்படுவதற்கு இடமில்லை. சமஷ்டி ஆட்சியின் கீழ் தமிழ் பேசும் மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குள் ஒதுக்கப்பட்டு விடுவார்கள் என்றும் தொழில் உத்தியோக வாய்ப்புக்கள், இவ்விரு மாகாணங்களுக்குள்ளும் கட்டுப்படுத்தப்பட்டு விடும் என்றுங்கூறுவது விஷமத்

[4-ம் பக்கம் பார்க்க]

னத்திலோ அல்லது வாடகைவாகனத்திலோ சென்றாலும் அந்த வாகனத்தைத் தடுத்து நிறுத்திப் பொலிசார் விசாரிப்பார். வாக்காளர்களை ஏற்றிச் செல்வதற்கு அந்தவாகனம் உபயோகப்படுத்தப்படுவதாகப் பொலிசாருக்குச் சந்தேகம் ஏற்பட்டால் அந்த

# திருவாரூர் தேர் ஓடியது

திருவாரூர். மே 18

கடந்த22ஆண்டு காலமாக ஓடாதிருந்த திருவாரூர் தேர் நேற்று ஓடியது. தமிழக அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர் திரு. கே. வி. சுப்பையா தேரின் காலில் தேங்காய் உடைத்தார். இந்துக் கோவில்களில் உள்ள தேர்களிலெல்லாம் மிகப்பெரிய தேர் திருவாரூர்த்தேர்தான். இத்தேரை பத்தாயிரம் பேராவது இழுத்தால்தான் நகரும் என்றகாரணத்தினால் இதுவரை தேர் ஓடுவது சாத்தியமில்லாமலிருந்தது. இப்பொழுது 5 ஆயிரம்பேர் இழுத்தாலே தேர் நகரக்கூடியவிதத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றது. இத்தேரின் எடை 170 தொன் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மையுண்டு, தேர்தல் முடிந்த பின்னர் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு அதில் குறிப்பிட்ட வாகனம் வாக்காளர்களை ஏற்றி இறக்கப்பயன் படுத்தப்பட்டதுஎன நிரூபிக்கப்பட்டால்அந்த வாகனம் பறிமுதல் செய்ய படும்.

வாக்களர் ஒருவர் நடந்து சென்றோ, பஸ், ரயில்களில் சென்றோ வாக்களிக்க முடியாதபடி நோய்வாய்ப் பட்டிருந்தால் அரசாங்க அதிபரிடமிருந்து முன் அனுமதி பெறவேண்டும்.

தேர்தல் வாக்களிப்புத்தினத்தன்று காலை 7மணி வரையும் அன்றுமாலை 6 மணிக்குப்பின்னரும் வாகனங்களையாரும் பயன் படுத்தலாம்

உண்மையாகவே சொந்த அலுவல்களுக்கு ஒருவர் தமது வாகனத்தையோ வாடகைவாகனத்தையோ பயன்படுத்துவதாக இருந்தாலும் அரசியல் கட்சிகள் அதைத் தமக்குச் சாதமா

## மாணவன் தற் கொலை

யாழ்ப்பாணம். செவ்வாய்

பள்ளிக்கூட மாணவன் கிருமிநாசினி குடித்துத்தற்கொலை செய்துகொண்டார். நீர்வேலி இந்துப்பாடசாலையில் படித்து வந்த செ. வன்னியசிங்கம் வயது 14) என்னும் மாணவனே தற்கொலை செய்து கொண்டவர்.

இது சம்பந்தமாக நடைபெற்ற மரண விசாரணையின்போது வன்னியசிங்கத்தின் தகப்பனுன பொ. செல்லத்துரை கவலையுடன் கூறியதாவது:- இவரே என் பிள்ளைகளில் மூதத் பிள்ளை ஆகவே எனது மகனைக் கண்டித்தேன் இதனால் மனக்கிலேசப்பட்டு மருந்து குடித்து மரணமாகி விட்டார்.

இவரது மரணவிசாரணையை திரு. என் இராசநாயகம் விசாரித்து தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## பிரி. தேர்தல் ஜூன் 18-ல்

லண்டன், மே 18

பிரிட்டனில் பொதுத் தேர்தல்கள் அடுத்த மாதம்18-ம் திகதி நடைபெறும் பிரிட்டிஷ் பிரதமந்திரி திரு. வில்சன் இன்று இதை அறிவித்தார்.

மாதம் 2-ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

காணிப்புச் செலுத்தவிருக்கின்றனராம்.

# 'எனது கட்சியை அழிக்கவே தமிழரசு தோன்றியது'

கொழும்புத்துறை செவ்

'வடமாகாணத்திலுள்ள ஆனையிறவுப்பாலம் கழிந்து தெற்கு நோக்கிச்செல்லும் தமிழரசார், தாம் சமஷ்டிக் கட்சி எனக் கூறிக்கொள்கிறார்கள். தெற்கில் இருந்து வடக்கே வரும்போது தாம் தமிழரசார் எனக் கூறிக்கொள்கிறார்கள் இதனால் இவர்கள் தெற்கிலுள் சிங்கள மக்களையும் ஏமாற்றி வடக்கிலுள்ள தமிழர்களையும் ஏமாற்றிவருகிறார்கள்

மாவட்டசபை பெற்றுத் தருகிறோம் பிரதேசசபை பெற்றுத்தருகிறோம் எனச் சொன்ன தமிழரசார் எதை பெற்றுத் தந்தார்கள்'

இவ்வாறு கொய்யாத் தோட்டத்தில் நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸ் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினார்.

'என்னையும் எனது கட்சியையும் அழிப்பதற்காகவே 48-ம் ஆண்டு தமிழரசுக் கட்சி தோன்றியது. நான் தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் ஒற்றுமைப்படுத்தியபோதுதிரு, செல்வா நாயகம் குறுக்கிட்டு அவ்வொற்றுமையைக் குலைத்து சின்னபின்னமாக்கிவிட்டார். பெரும்பான்மை அங்கத்தவர்களைக்கொண்ட தமிழரசாரினால் 15 வருடகாலமாக நமது பிரதேசம் பின்தங்கிய நிலையிலிருந்து வருகிறது' இவர்களுடைய காலத்தில் வடபகுதியில் ஏதாவது தொழிற்சாலைகள் நிறுவினார்களா? அல்லது 1961-ல் சத்தியாக்கிரகம் இருந்து பலனடைந்தார்களா?' என திரு. பொன்னம்பலம் கூறினார்.

திருவாளர்கள் மோதிலால் நேரு, ஜிம்மி இராஜரத்தினம், போல் ராஜா த கனகசபை ஆகியோரும் பேசினர்.

## அடைவு நகைகள் பகிரங்க ஏல விற்பனை

யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி சுன்னுகம் கிளையில் 1-1-69க்கு முன்பு அடைவு வைத்து மீட்கப்படாது இருக்கும் நகைகள் 3-6-70 புதன்கிழமை பிற்பகல் 1-00 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கியின் சுன்னுகம் கிளையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

முகாமையாளர்,
யாழ். கூட்டுறவு மாகாண வங்கி,
சுன்னுகம் கிளை.

2250

இந்த மசோதா தாக்கல்

நாயகர் திருதில்லோன தெரிவித்தார்.

# 'சிறுபான்மையினருக்கு தனித்தொகுதி சோல்பரிக்கமிஷனிடம் முதலில் நானே கேட்டேன்''

கோப்பாய், திங்கள்

'தமிழ்மக்களின் அரசியல் வரலாற்றில் 56ம் ஆண்டுக்குப்பின்னர் நெருக்கடியான சூழ்நிலை உருவாகியுள்ளது. அவர்களின் கௌரவம், தன்மானம், உரிமைகள்யாவும் படிப்படியாக நசுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலை தமிழ் மக்களுக்கேற்பட, இந்நாட்டில் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகவாழ வழிவகுத்த பெருமை தமிழரசுக்கட்சியினரையே சாரும்'.

இவ்வாறு கோப்பாய் வடக்கு கண்ணகை அம்மன் கோவிலடியில் நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் கட்சியின்

(4 ம் பக்கத் பார்க்க)

# குரங்குகளுடன் சேட்டை செய்த குழந்தைகள் ஆஸ்பத்திரியில்!

யாழ்ப்பாணம், செவ்வாய்காரணமாக குரங்குகளுக்கு விளையாட்டுக் காட்டிய குழந்தைகள் அவற்றினால் கடியுண்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு சுதந்திரபுரத்தில் இச்சம்பவம் நடைபெற்றது.

பல இளநீர்களில் சிறிய ஓட்டையிட்டு, பிஞ்சு மிளகாய் பச்சடிச் சிரட்டைகளையும் குரங்குகள் நடமாடும் வயலுக்கருகில் வைத்துவிட்டு ஒதுங்கியிருந்தார்களாம். வழக்கமாக அங்கு வரும் குரங்குகள் இளநீரில் பிரியமுற்று ஒரு கையை இளநீர் துவாரத்துக்குள்ளும் மறுகையை சம்பலிலும் தொட்டுக்கொண்டன. பின்னர் அவை விளையாட்டுக்காக முகத்திலும் தடவிக்கொண்டன. இதனால் முக எரிவின் நிலை தளர்ந்து தம்முட்தாம் சண்டையிடத் தொடங்கின. சிறிய துவாரமுடைய இளநீருக்குள்ளிருந்து கைகளை எடுக்க முடியாமையினால் ஒவ்வொரு குரங்கும் மறு குரங்குகளை இளநீரால் தாக்கத் தொடங்கின.

இந்தக் கலவரத்தில் ஐம்பது குரங்குகள் பங்குபற்றினவென்றும் அவற்றுள் சில இறந்துவிட்டனவென்றும் தெரியவருகிறது. வேடிக்கை பார்த்த சிறுவர்களுள் சிலரும்குரங்குகளினால் கடிக்கப்பட்டனரென்றும் தெரியவருகிறது.

குழந்தைகளைப் பக்கத்து வயல்களில் வேலை செய்தவர்கள் காப்பாற்றினார்களாம். ஆயினும் இரண்டு சிறுவர்கள் குரங்கு கடித்து காயங்களுடன் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(கு. வி. ம.)

## இலங்கரத்தின வருகிறார்

யாழ்ப்பாணம், செவ்

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைவர்களில் ஒருவரான திரு. ரி. பி. இலங்கரத்தின 20ந் திகதி பலாலி விமான நிலையத்தில் வந்து சேர்வார் அங்கு அவருக்கு வரவேற்பொன்று கொடுக்கப்படும் அதனைத்தொடர்ந்து அச்சுவேலி. கோப்பாய்' உரும்பராய், நல்லூர், சுன்னுகம், காங்கேசன்துறை ஆகிய இடங்களில் அளிக்கப்படும் வரவேற்புகளிலும் கலந்து கொள்வார்.

# 2-ம் எதிரி என்ன பார்த்துக்கொண்டிருக்கிறாய் என்றதும் 1ம் எதிரி சுட்டார்''

## கரவெட்டி துப்பாககிச்சூட்டுக் கொலை வழக்கில் சாட்சியம்

வல்வெட்டித்துறை, திங்கள்

''இரண்டாவது எதிரி முதலாவது எதிரியை நோக்கி என்னபார்த்துக் கொண்டு இருக்கிறாய் எனக் கேட்க உடனே 1-ம் எதிரி தான் வைத்திருந்த துப்பாகியால் ஆனந்தனை நோக்கிச் சுட்டார். சூடுபட்டவர் கண்ணை மூடிக் கொண்டு ஐயோ யோகா சுட்டுப் போட்டார்கள்' எனச் சொல்லிச் சுழன்றார். சூடுபட்டு இறந்தவர் சுழன்று கொண்டிருந்த சமயத்தில் நான் அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டேன்'' எனகரவெட்டி மேற்கு சாமியன் அரசடியைச் சேர்ந்த வல்லிபுரம் சிவயோகநாதன் என்னும் 17 வயது வாலிபன் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில்மேற்கண்டவாறுகூறினார்.

இவ்வழக்கு கரவெட்டியைச் சேர்ந்த க. வன்னியசிங்கம், செ. பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரும் இவ்வருடம் சித்திரைமாதம் 4-ந் திகதி அதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இராகவன் அல்லது ஆனந்தன் என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் சிவயோகநாதன் மேலும் தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

''சம்பவநாள் இரவு 9-30 மணியளவில் நான் வீட்டில் இருந்தேன். அப்போது ஆனந்தன் வந்து என்னைக் கூப்பிட்டார். நான் அவருடன் இறந்தவரின் தமையனுன நமசிவாயம் என்பருடைய வீட்டிற்குப் போகப்புறப்பட்டோம். அப்படிப்போய்க் கொண்டிருக்கையில் இலகடிச் சந்தியில் இறந்தவரை நோக்கி டோர்ச்லைட் அடிக்கப்பட்டது அப்போதுஇறந்தவர் யாரது லைட் அடிக்கிறது எனக்கேட்க 2-வது எதிரி இறந்தவர நோக்கி என்ன சண்டித்தனம் கதைக்கிறாய் எனக்கேட்டார் இறந்தவர் நேரம் போகுது எனக் கூறித் தம்மைப் போகவிடும்படி சொன்னார். உன்னைப் போவிடுவதோ என்றும் நீ பெரிய போத்தல் சண்டியனோவென்றும் கேட்டார். அதற்கு இறந்தவர் அப்போ என்ன செய்யப்போகிறீர்கள் எனக் கேட்டார். 1-ம் எதிரி, 2-வதுஎதிரியை நோக்கி என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய் எனக் கூற, உடனே 1-ம் எதிரி துப்பாக்கியால் இறந்தவருக்குச் சுட்டார். நான் சம்பவத்தை பார்த்துவிட்டு அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டேன். பொலிசாருக்கும் வாக்குமூலமளித்தேன்.''

மேல்விசாரணை அடுத்த மாதம் 2-ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.


# தமிழ்ப்பேசும் மக்களே திரண்டுவாரீர்!

காங்கேசன்துறைத் தொகுதி வேட்பாளர், ஈழத்தமிழினத்தின் ஏகத்தலைவர்

தமிழரசுத்தந்தை

உயர்திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் கியூ. ஸி.

அவர்களை ஆதரித்து

இன்று (19-5-70) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 6 மணிக்கு

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தலைமையில்

குரும்பசிட்டியில்

மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும்.

சட்டத்துறை மாணவி

மட்டுநகர் செல்வி சாந்தினி லோகிதராஜா கலந்துகொள்கிறார்.



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

2114 குரும்பசிட்டி தமிழரசு ஆதரவாளர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வைபவம்

திரு. வ. முத்து அவர்களின் அந்தியேட்டி வைபவம் எதிர்வரும் வியாழக்கிழமை அன்று (21-5-70) அச்சுவேலியில் நடைபெறவிருக்கின்றது. உற்ருர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றேன். திருமதி முத்து, அச்சுவேலி வடக்கு. 2124

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குளியில் கண்டிவீதி அண்மையில் குடியிருப்பதற்கேற்ற நான்கு பரப்பு விஸ்தீரணமான நாற்பது துண்டுகள் விற்பனைக்குண்டு தென்னைகள், நல்ல தண்ணீர், மின்சாரம் உள. நல்ல சூழல். மத்தியவகுப்பினர் குடியேற்றத்துக்கு ஏற்ற இடம். பெரியகடையிலிருந்து பஸ் கூலி பதினைந்து சதம். எழுத்து மூலம் விண்ணப்பிக்க. லான்ட் இன்வெஸ்ற்மென்ற் 6, பெரியதெரு, யாழ்ப்பாணம். 2234

இல L 1668 கோட் தீர்வைப்படி கல்வியங்காடு இராசா வீதியில் பூபாலசிங்கம் J. P. வீட்டிற்கு எதிரில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். ப. விக்கிரமராசசிங்கம், மீசாலை தெற்கு. செ. செல்வரத்தினம், நீர்வேலி 6 கட்டை. 2236

யந்திரங்கள்:

நல்லெண்ணை தயாரிக்கும் எக்ஸ்பெல்லரும் (Expellar) வடிக்கும் சாதனமும் (Filter), 10 H. P. (கோஸ் பவர்) போட்டருடன் 3 பேஸ் மோட்டர் 200 அம்ஸ் வெல்டிங் மெசீன், டிறில்லிங் மெசீன் கொண்டியூட் பைப்பென்டர் ஆகியனவும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: A. கதிரவேற்பிள்ளை, வெல்டிங் வேக்ஸ், வல்வெட்டித்துறை. 2122

## நன்றி நவிலல்

சித்திரா பூரணையன்று காலமான எனது கணவரும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவரும் புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியின் முன்னைநாள் விளையாட்டுப் பயிற்றும் ஆசிரியருமான திரு. வ. முத்து அவர்களின் ஈமக்கிரிகைகளில் பங்கு பற்றிய அனைவருக்கும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எனது நன்றி தனித் தனியே நன்றி தெரிவிக்க இயலாமைக்கு வருந்துகின்றேன். திருமதி முத்து அச்சுவேலி வடக்கு. 2123

## வாடகைக்கு

கே. கே. எஸ். வீதியில் 504-நம்பர் வீடு (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும், லேடீஸ் கொலிச்சுக்கும் சமீபத்தில்) எல்லா வசதிகளுடன் வாடகைக்கு இருக்கிறது. விபரங்கட்கு: S. K. சேனாதிராசா நகை மாளிகை, கொக்குவில் கிழக்கு. 2238

## கல்வி

சித்தி நிச்சயம், ஜீ. சி. ஈ. (சாதாரணம்) கலை/விஞ்ஞானம்/வர்த்தகம்; உயர்தரம் கலை/வர்த்தகம், ஆசிரிய கலாசாலைப் பிரவேசம், ஜீ.ஏ கியூ; விசேட ஆங்கிலம், சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல், வர்த்தகம், வர்த்தக கணித பாடங்களுக்கு பகல்/ மாலை/ ஒய்வுநாள் வகுப்புகளுககு பிரவேசங்கள் ஏற்கப்படுகின்றன. மகளிர்க்கு தனி விடுதி அனுபவமுள்ள பட்டதாரிகளால் நடத்தப்படுவது. யூனைட்டெட் அக்கடெமி, நெல்லியடி, கரவெட்டி. 2243


**வெஸ்லிசினிமா**

மானிப்பாய்

தினசரி: 6-30, 10-00

பிர்போயா, போயா 2-30 மணி

ரங்கராவ் - மாஸ்டர் பிரபாகன் நடித்த

**பக்த பிரகலதா**



**மாபெரும் தேர்தல் கூட்டம்**

உடுவில்தொகுதி இலங்கை சமசமாஜக்கட்சிவேட்பாளர்

தோழர் **வை. காராளசிங்கம்** அவர்களை

ஆதரித்து

19-5-70 செவ்வாய்க்கிழமை (இன்று)

பிற்பகல் 6 மணியளவில்

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு அண்மையில்

நடைபெறும்.

பிரதம பேச்சாளர்

**தோழர் டொறிக் டி சூசா அவர்கள்**

2113



**ராணி** (யாழ்ப்பாணம்)

6வது வாரம்

சிவாஜி, கே ஆர் விஜயா


# வேட்பாளர் அறிமுகம்

## கல்முனை

**ஜனாப் எம். சி. அகமது**
(ஸ்ரீ ல சு கட்சி)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளராகப் போட்டியிடுகிருர் ஜனாப் எம். ஸி. எம். அகமது 1960-ம்ஆண்டு தேர்தலில் முதன் முதல் போட்டியிட்ட இவர் இதே ஆண்டு 1960ம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற்ருர்.

கல்முனையிலுள்ள உவெஸ்லிக் கல்லூரியில் பயின்ற இவர் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திசபையிற்கடமையாற்றி ஓய்வுபெற்றவர். இப்பணியைச் செய்யுமுன்னர் தபால் அதிபராகவும் உத்தியோகம் பார்த்துள்ளார், கல்முனையின் உள்ளூராட்சி அரசியலில் பிரவேசித்த ஜனாப் அகமது பட்டின சபை அங்கத்தவராகி அதன் தலைவராகவும் பலவருடங்கள் பணிபுரிந்தவர். சமுதாயத்துக்குச் சேவைசெய்ய வேண்டுமென்ற கருத்துடைய ஜனாப் அகமது பலவிதமான சமூக ஸ்தாபனங்களின் தொடர்புடையவர்.

1960ம் ஆண்டு ஜூலை மாதத்தில்நடைபெற்ற தேர்தலில் தமிழரசு வேட்பாளராகப்போட்டியிட்டு வெற்றியீட்டிய ஜனாப் அகமது 1965ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகவே போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். ஆனால் 1968ம் ஆண்டு நடைபெற்ற உபதேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் தமிழரசுக் கட்சி வேட்பாளரை வெற்றி கண்டார்.

0 0 0

**ஜனாப் ஏ உதுமா லெப்பை**
(இ. தமிழரசுக்கட்சி)

தமிழ்மீது பற்றும் தமிழில் நல்லமுறையில் உரையாற்றும் வன்மையும் பெற்றவர் ஜனாப் ஏ. உதுமா லெப்பை. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடும் இவர் 25 வயதுடைய இளைஞராவர்.

முதன்முதல் இப்போது தான் ஆட்சிமன்றத் தேர்தலில் நிற்கிருர். இவர் பல நாட்களாக சமூக பணிகளில் முன்னின்று உழைத்து வருபவர்.

ஆயுள்வேத டாக்டரான இவர் மக்களுடன் தொடர்பு கொள்ளக் கூடிய சமூக ஸ்தாபனங்களுடன் தொடர்புடையவர்.

கல்முனை 1ம் குறிச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜனுப் உதுமா லெப்பை கல்முனை உவெஸ்லிக் கல்லூரியிற் கற்றவர்.

அயுர்வேதக் கல்லூரியில் பயிலும்காலத்தில் கல்லூரிச் சங்க நடவடிக்கைகளில் முக்கிய பங்கு கொண்டு உழைத்தவர். இதனுல் இவர் மேற்படி கல்லூரியின் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டவர்.

0 0 0

**எம் ஆர் எம மன்சூர்**
(ஐ. தே. க.)

முன்னுள் கல்முனை ஆட்சிமன்ற உறுப்பினராகவிருந்த கேட்முதலியார் எம் எஸ் எம் காரியப்பரின்மருகனே ஜனுப் ஏ. ஆர். எம். மன்சூர் ஐ.தே.கட்சியில்போட்டியிடுகிருர்.

வழக்கறிஞராகக் கடமை புரியும் ஜனுப் மன்சூர்முதற் தடவையாக இப்போது தான் ஆட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுகிருர்'

பல சமூக சேவை இயக்கங்ளில் பங்கு கொண்டுஉழைத்து வருபவர் இவர். பல பொதுஜன ஸ்தாபன்ங்களில்முக்கிய பொறுப்பான பதவிகளை வகித்துள்ளார் கல்முனையிலுள்ள உவெஸ்லிக் கல்லூரியில் பயின்றவர் பலகாலமாக சமூகப்பணியின் மூலம் மக்களுடன் தொடர்புடைய இவர் இத் தொகுதியில் போட்டியிடும் ஜனுப் அகமதுவின் உறவினருமாவர்.

## தவறு

''கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத் தான் இந்நாட்டிலே'' என்ற தலைப்பில் நீர்வேலி தமிழரசு வாலிபமுன்னணி வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தின்

## 'தன்னைத்தானே தமிழினம் அழிக்காது'

மட்டுவில், திங்கள்

'சிங்களவரின் சலுகைகள் வேண்டாம், இன்று தமிழன் தன்மானம் காக்கத் துணிந்துவிட்டான். தமிழரின்உரிமைகளைப்பெறுவோம். தமிழன் என்று சொல்வேம், தலைநிமிர்ந்து நிற்போம், எங்களைநாமே ஆளுவோம் என்று வீருப்புக்கூறி அன்று சென்றவர்கள் இன்று ஒற்றை ஆட்சியே சிறந்தது சிங்களஅரசுடன் ஒத்துழைத்து சலுகைகளைப் பெறுவோம் என்று கூறுகின்ருர்கள்' என மட்டுவில் தெற்கில் மட்டுவில் கந்தர்மகா வித்தியாலயத்திற்கருகாமையில்நடைபெற்ற அரசியல் பிரசாரக்கூட்டத்தில் சாவகச்சேரி முன்னுள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு, வ ந. நவரத்தினம் கூறினுர்.

திரு. சடையர் சுந்தரம் தலைமையில் சாவகச்சேரித் தொகுதித் தமிழரசு வேட்பாளர் திரு. வ. ந. நவரத்தினத்தை ஆதரிக்கு முகமாக மட்டுவில் கல்வயல் தமிழரசு வாலிப முன்னணியின் ஆதரவில் இக் கூட்டம் நடைபெற்றது. திரு'நவரத்தினம் தொடர்ந்து பேசியதாவது;

'1955ல் திரு. வேலுப்பிள்ளை குமாரசாமி ஒருஜீ.ஜீ பொன்னம்பலத்தை உதறித் தள்ளிவிட்டு அன்றைய பிரதமர் திரு. கொத்தலாவலையை சகலதிற்கும் தெய்வமாக நம்பிக் கொண்டு இருந்தார். 'கொத்தலாவலையே யாழ்ப்பாணம் வராதே. உன்வரவைப் பகிஷ்கரிப்போம்' என்ற திரு. பொன்னம்பலத்தின் பயமுறுத்தலைக்கண்டு தமது பயணத்தை ரத்து செய்யவிருந்த திரு. கொத்தலாவலைக்கும் உஷார் கொடுத்து அவரின் யாழ்ப்பாண விஜயத்தை வெற்றிகரமாக முடித்துவைத்தார்.

இவர்கள் அரசியலைத் சூதாட்டமாக எண்ணி மக்களைப் பகடைக்காயாக வைக்கும் அளவிற்கு தமிழன்இன்றில்லை. கல்வி, அரசியல் மற்றும் சகலவற்றிலும் தமிழ்மக்கள் தெளிந்து விட்டனர். இனியும் தமிழினம் ஏமாந்து தன்னினத்தைதானே அழிக்கும் நிலைக்கு வரமாட்டாது என்ருர்:

கிரிக்கெட்

## ஸ்கந்தா வெற்றி

யாழ்ப்பாணம், செவ்.

சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் ஹாட்லிக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 'சி' பிரிவுக் கிரிக்கெட் போட்டியில், ஸ்கந்தவரோ தயாக் கல்லூரி இன்னிங்ஸால் வெற்றி பெற்றது.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 116 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வீரர் இளங்கோ 34 ஓட்டங்களைப் பெற்ருர். ஹாட்லிக் கல்லூரி தனது இரண்டு இன்னிங்ஸிலும் முறையே 68, 38 ஓட்டங்களைப் பெற்றது. இந்த இரண்டு இன்னிங்ஸிலும் வீரர் இளங்கோ 34 ஓட்டங்களைக் கொடுத்து 11 விக்கெட்டுகளை வீழ்த்தினுர்.

### சமமான முடிவு

இவ் இரு கல்லூரிகளினதும் 'பி' பிரிவுக் கோஷ்டிகளுக்குமிடையில்நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஸ்கந்தாக் கல்லூரி இரு இன்னிங்ஸிலும் முறையே 123, 72 ஓட்டங்களைப் பெற்றது. ஹாட்லிக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 116 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட் நஷ்டத்துக்கு 40 ஓட்டங்களையும் பெற்றது.

(தே. நி)

மாநகரசபை

## 'பி' பிரிவில் சாம்பியன்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். மாவட்ட அரசாங்க ஊழியர் விளையாட்டுச்

## 'இழந்த உரிமைகளை கூட்டு முன்னணி பெற்றுத்தரும்'

மாவிட்டபுரம், திங்கள்

''கடந்த 20 வருடங்களாக தமிழரசுக் கட்சி தமிழ் மக்களை இட்டுச் சென்ற பாதை தமிழ்இனத்தைபுதைகுழியில் புதைப்பதாக இருந்தே தவிர உரிமை பெற்றுக் கொடுக்கவில்லை. தமிழ் அரசுக்கட்சியை நம்பி தமிழ் மக்களே மோசம் போகா தீர்கள்''.

இவ்வாறு காங்கேசன் துறையில் போட்டியிடும் கம்யூனிஸ்ட் வேட்பாளர் திரு. வி. பொன்னம்பலம் தம்மை ஆதரித்து கருகம்பானைச் சந்திக்கு அருகாமையில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

திரு எஸ். கிருபாலலிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

''20 வருடமாக தமிழரசுக்கட்சியை மககள் நம்பி அனுப்பியும் அவர்கள் காட்டிய பாதை சரியாக இருக்கவில்லை. மக்களை ஏமாற்றி பதவிபெறவேண்டுமென அவர்கள் நினைக்கிருர்களேதவிர உரிமை பெற வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் ஓர் அணுவளவாவது இல்லை''

திரு. எஸ். ராசா பேசுகையில் ''தமிழரசுத்தலைவர்கள் பொதுவுடைமைக் கட்சி என்றவுடன் பயப்படுகிருர்கள். இவர்கள் பயப்படும் அளவுக்கு கம்யூனிட் கட்சியின் திட்டங்கள் இல்லை'' என்ருர்.

கோப்பாய் ஸ்ரீலங்காவேட்பாளர் திரு. எம். துரைராசா பேசுகையில்; ''சிங்கள மக்களிடமிருந்து நாம் இழந்த உரிமைகளைப் பெறவேண்டுமானுல் சிங்கள மக்களை பயமுறுத்தியோ எதிர்நடவடிக்கை ஒடுத்தோ பெறமுடியாது அவர்களுடன் ஒத்துழைத்துத்தான் நாம் உரிமை பெறமுடியும் கூட்டுமுன்னணி கட்டாயம் இழந்த உரிமைகளை மீட்டுத் தரும்'' என்ருர்.

திரு. பொன். நாகலிங்கம் இ, நரசிங்கம் உட்படலர் உரையாற்றினர்.

சிறிமாவோ வென்ருல்

## 'கம்யூனிச நாடாகிவிடும்'

மாபொல, திங்கள்

'எதிர்வரும் பொதுத்தேர்தலில் மக்கள் ஜனநாயகத்தையோ அல்லது சர்வாதிகாரத்தையோதெரிவுசெய்ய வேண்டும் என்பதுதற்போது வெளிப்படையாகத் தெரிகிறது.'

வத்தளைத் தொகுதியின் ஐக்கியதேசியக்கட்சி வேட்பாளரை ஆதரித்து மாபொலவில் நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் கடற்ருெழில் கைத்தொழில் உதவிமந்திரி திரு. ஷெல்ரன் ஜயசிங்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் திருமதி பண்டாரநாயக்காவின் தலைமையிலான கூட்டணி அதிகாரத்துக்கு வந்தால் நாடு கம்யூனிச நாடாகிவிடும். மக்களுக்கு எதுவித சுதந்திரமும் கிடையாது. எனவேதான் ஜனநாயகத்துக்கும் மக்கள் சுதந்திரத்துக்கும் போராடுகிற ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும். மாக்ஸீய வாதிகள் திருமதி பண்டாரநாயக்காவின் தலைமையின் கீழ் அதிகாரத்தைக் கைப்பற்ற முயல்கிருர்கள். இது நாட்டின் சுதந்திரத்திற்கு ஏற்பட்டுள்ள பேராபத்தாகும் எனக் குறிப்பிட்டார்.





**விங்க்மை போட்டி**

பரிசுக்குரிய எண்கள்

இன்று

பிற்பகல் 3 மணிக்குத் தெரியப்படும்.

நடைபெறும்.
பிரதம பேச்சாளர்
தோழர் டொறிக் டி சூசா அவர்கள்
2113

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
6வது வாரம்
சிவாஜி, கே ஆர் விஜயா
நடித்த
# திருடன்

வின்ஸர் 6 வது வாரம்
யாழ்ப்பாணம்
தினசரிபி.ப 2-30 6-30
சிவாஜிகணேசன் — பாரதி
மற்றும் பலர் நடித்த
# தங்கச் சுரங்கம்
(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

தினசரி: காலை 10-30 இரவு 9-45
ரி. ஆர். ராமச்சந்திரன்—தங்கவேலு
அஞ்சலிதேவி — கருணாநிதி
நடித்த
## அடுத்தவீட்டுப் பெண்

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)
★ முத்துராமன்
★ புஷ்பலதா
★ நாகேஷ் ★ நம்பியார்
நடித்த
# சுப தினம்

வெற்றிகரமான 4வது வாரம்!
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
ரங்கராவ், பேபி பத்மினி, நாகேஷ்
இன்னும்பலர் நடித்த
பி. நாகிரெட்டி அளிக்கும்
# நம் நாடு
(ஈஸ்ட்மென் கலர்

இங்ஸ்லி கொழும்பு
தினசரி 2-00, 6-00, 9 30 மணி
காந்தாராவ் - பாரதி
நடித்த
# மாய மோதிரம்

## தவறு

"கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத் தான் இந்நாட்டிலே" என்ற தலைப்பில் நீர்வேலி தமிழரசு வாலிபமுன்னணி வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தின் அடியில் நீர்வேலி வடக்கில் வசிக்கும் திரு. க. இராசதுரை அவர்களால் வெளியிடப்பட்டது என்றிருக்க வேண்டும். திரு. இ. இராசதுரை என்றிருப்பது தவறு.
2272

## கல்வி

சித்தி நிச்சயம் ஜீ. சி ஈ. சாதாரண/ உயர்தர-கலை/ விஞ்ஞானம் / வர்த்தகம்/ மனைஇயல், ஆசிரியகலாசாலைப் பிரவேசம், ஜீ. ஏ. கியூ. யீ. ஏ; விசேட ஆங்கிலம்/ சிங்களம், சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல், வர்த்தகம், வர்த்தககணிதம்/ பூமிசாஸ்திரம். காலை/பகல்/மாலை/ ஒய்வுநாள் வகுப்புகளுக்கு பிரவேசங்கள் ஏற்கப்படுகின்றன. அனுபவமுள்ள பட்டதாரிகளால் நடாத்தப்படுவது மகளிருக்கு தனிவிடுதி அனேகமாணவர் விசேட சித்தி பெறுகின்றனர். யூனைட்டெட் அக்கடமி, நெல்லியடி, கரவெட்டி.
2244

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00
ஷம்மிகபூர்- ராஜ்ஸ்ரீ
நடித்த
## பிரம்மச்சாரி
(ஹிந்தி-கலர்)

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
எம்.ஜிஆர்-அஞ்சலிதேவி
நடித்த
## சக்கரவர்த்தித் திருமகள்

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p. m.
Poya&Public Holidays
4 shows
Nigel Green,
George Kennedy
in
PINK JUNGLE
(Scope-coluor)

REGAL JAFFNA
Daily 4 Shows
Yul Brynner,
Trevor Howard
in
THE LONG DUEL
(Panavision-colour)

மாநகரசபை

## 'பி' பிரிவில் சாம்பியன்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். மாவட்ட அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கத்தினால்நடாத்தப்பட்டு வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 'பி' பிரிவில் யாழ். மாநகரசபைக் கோஷ்டி சாம்பியனாக வந்தது.

சிமேந்து 'ஏ' பிரிவுக் கோஷ்டியும், மாநகரசபைக் கோஷ்டியும் மோதிய போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா 1—1 கோல்களைப் போட்டமையால் ஆட்டம் சமமாக முடிவடைந்தது.

இந்த இரு கோஷ்டிகளினதும், கடந்த போட்டிகளில் மாநகரசபைக் கோஷ்டியே கூடிய புள்ளிகளை பெற்றமையால், இக்கோஷ்டி இறுதிப் போட்டியில் ஆடுவதற்குத் தகுதி பெற்றது.

இப் போட்டி யாழ். கோட்டை மைதானத்தில் நடைபெற்றது. திரு. சற் சிங்கராயர் மத்தியஸ்தம் வகித்தார்.

இறுதிப் போட்டி, தபால் கோஷ்டிக்கும் - மாநகரசபை கோஷ்டிக்குமிடையில் மிக விரைவில் நடைபெறவிருக்கின்றது. (தே. நி)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 பேச்சு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடுபாப்பா.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 வயலின், 7-45 பேச்சு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்திச் சுருக்கம்.

பெற்றது. ஹாட்லிக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 116 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட் நஷ்டத்துக்கு 40 ஓட்டங்களையும் பெற்றது.
(தே. நி)




# இன்று
பிற்பகல் 3 மணிக்குத் தெரியப்படும்.




பரிபூரண மனநிறைவு பெற அன்பு மொழி பலகூறும்.
கோயா பேர்பியூமும், கொலோனும் பாவித்திடுக!

அன்பர் அருகிலிருக்கையில் ஆசை மொழிகூறல் கடினம். அனைவரும் குழுமியிருக்கையில் அன்பு மொழி பேசல் அதி கடினம்.

சம்பாஷிக்க முடியா இவ்வேளைகளில் இதயத்தின் விருப்பையும் உள்ளத்தின் உண்மை எண்ணத்தையும் எடுத்துரைப்பவை

கோயா பேர்பியூமும், கொலோனும்.

இதய கமலத்தின் முழுநிறைவுக்கும், நீடிய சுகந்தத்திற்கும். பாரிஸ், நியூயார்க், லண்டன் நகரங்களின் நவநாகரீக மாதர் உணர்ந்துள்ள இரகசியம் கோயா பேர்பியூங்களும் கொலோன்களுமே!

மனோகர சுகந்தமளிக்கும் பிளக் ரோஸ், என்டைஸ், கார்டீனியா, லவ் அப்பயர், கோயா நம்பர். 5, வைல்ட் சில்க், டைம்லஸ் ஆகிய ஏழ் வகையிலிருந்து தெரிந்தெடுங்கள்




இதய வீணையின் இன்இசை கூறுவன கோயா பேர்பியூமும் கொலோனும்.

GRANT 12 104 70


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10,000 தென்வியட்நாம் துருப்புக்கள் கம்போடியாவினுள் பிரவேசம்

## வியட்காங் முகாம்களை நிர்மூலமாக்குமாம்

நாம்பென், மே. 18

பத்தாயிரம் தென் வியட்நாம் துருப்புக்கள் கம்போடியாவுக்குள் புதிதாகப் புகுந்து வியட்காங் முகாம்களை நிர்மூலமாக்குவதற்காக முன்னேறிச் சென்றுகொண்டிருக்கின்றன. கம்போடியாவுக்குள் 30 கிலோமீட்டர் தூரம் சென்றுள்ள இத்துருப்புக்கள் டாங்கிகள், பீரங்கிகள் சகிதம் சென்றுகொண்டிருக்கின்றன. இத் துருப்புக்களுக்கு உதவியாக அமெரிக்கப்போர் விமானங்கள் செல்கின்றன. தென் கம்போடியாவுக்குள் சென்றுள்ள இந்தத் தென் வியட்நாம் துருப்புக்கள் வியட்காங் முகாம்கள் அங்கிருப்பதாகவும் அவற்றை நிர்மூலமாக்கிவிட்டுத் திரும்புவார்களென்றும் தென் வியட்நாம் அரசாங்கம் அறிவித்தது.

### கம்போடிய துருப்புக்கள் மீது கம்போடிய விமானம் தாக்குதல்

கம்போடியாவில் மீக்கொங் நதிப்பகுதியில் ஒரு நகரில் வியட்காங்கில்ர் என்று கருதி கம்போடிய போர் விமானம் ஒன்று கம்போடியத் துருப்புகள் மீதே குண்டு வீசித் தாக்கிய சம்பவம் நிகழ்ந்துள்ளது. இத் தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டனர். 50 பேர் காயமடைந்தனர். மாண்டவர்களில் நால்வர் கம்போடிய குடிமக்களாவர்.

தென் வியட்நாமுக்குச் சொந்தமான இந்த விமானம் குண்டுவீசித் தாக்கத் தொடங்கியதும் கம்போடியத் துருப்புக்கள் வெள்ளைக் கொடிகளை ஆட்டிக்கொண்டு குண்டு வீசுவதை நிறுத்துமாறு கோரினர். துருப்புக்கள் அச்சத்திஞல் அங்குமிங்கும் சிதறி ஓடினர். இதன் பின்னர்தான் குண்டுவீசியவர்கள் தங்கள் தவறை உணர்ந்தனர்.

### கம்போடியநகர் மீண்டும் கம்போடியர் வசமானது

கம்போடியாவில் மீக்கொங் நதிக்கருகிலுள்ள காமபொங்சாங் என்ற நகர் மீண்டும் கம்போடியரின் வசமானது. சென்ற சில தினங்களாக வியட்காங்கியரின் கையிலிருந்த இந்த நகரை கம்போடிய, தென் வியட்நாமிய துருப்புக்கள் கடும் போராட்டத்தின் பின் மீட்டனர்.

### மறுப்பு

கம்போடியாவிலுள்ள சீனப்பிரஜைகளுக்குஎதிராக கம்போடிய அரசாங்கம் பாகுபாடு காட்டுவதாக சீஞ சுமத்திய குற்றச்சாட்டை கம்போடிய அரசாங்கம் மறுத்திருக்கிறது. கம்போடியாவிலுள்ள சீனப்பிரஜைகளும் கம்போடிய மக்களும் அன்னியோன்னியமாக வாழ்கிருர்களென்றும் இந்த உறவைக் கெடுக்கவே சீஞ இப்படிக் குற்றச்சாட்டைச் சுமத்தியிருப்பதாக கம்போடிய அரசாங்கம் கூறியது.

### இருநாள் போர் ஓய்வு

புத்தபகவான் அவதரித்த ஞானம்பெற்ற, முத்தியடைந்த தினமான விசாக் பண்டிகையையொட்டி இரண்டு தினங்களுக்கு போர் ஓய்வு கடைபிடிக்கப்படும் என்று தென் வியட்நாம் அரசாங்கம் அறிவித்திருக்கிறது. வியட்நாமில்தான் இந்தப் போர் ஓய்வு கடைப்பிடிக்கப் படுமென்றும் கம்போடியாவில் தனது நடவடிக்கைகள் தொடருமென்றும் அது அறிவித்தது.

### அந்நியத்துருப்புக்கள் யாவும் வெளியேற வேண்டும்

கம்போடியாவிலிருந்து அந்நியத் துருப்புக்கள் ... மெனவும் மகாநாடு தீர்மானித்தது. இதற்காக இந்தோ

## வெப்பத்துக்கு 55 பேர் பலி

நாகபுரி, மே. 18

நாகபுரியில் வெப்பத்துக்கு கடந்த நான்கு தினங்களில் 55 பேர் பலியாஞர்கள் சுமார் ஆயிரம்பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

## வகுப்பு ஒற்றுமை பத்திரிகை ஆசிரியர்கள் கோரிக்கை

புதுடில்லி, மே 18

வகுப்பு ஒற்றுமையைப் பாதுகாக்கவும் நாட்டில்சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும் பத்திரிகை ஆசிரியர்கள் உழைக்க வேண்டுமென்றும் அகில இந்திய பத்திரிகை ஆசிரியர்கள் மகாநாடு கேட்டுக்கொண்டுள்ளது. அரசியல் கட்சிகளும் தங்கள் கட்சிக் கொள்கைகள் எதுவாஞலும் வகுப்பு சௌஜன்யத்தையும் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றையும்நிலைநாட்ட ஒத்துழைக்க வேண்டுமென்றும் அந்தமகாநாடு வேண்டுகோள் விடுத்துள்ளது.



## லெபஞன்-சிரியாதலைவர்கள் மேற்காசியா பற்றிப்பேச்சு

டமாஸ்கஸ், மே. 18

லெபஞன் பிரதமர் கராமியும் சிரியாஅதிபரும் மேற்கு ஆசிய நிலைமை பற்றியும் சிரியா லெபஞன் உறவுபற்றியும் ஆராய்ந்தனர்.

இப் பேச்சுவார்த்தைகளில் இரு நாட்டு மந்திரிகள் சிலரும் கலந்துகொண்டனர். பாலஸ்தீனப் பிரச்னையில் அரபு மக்களின் கோரிக்கைகளை லெபஞன் ஆதரிப்பதாகவும் பாலஸ்தீன விடுதலை இயக்கமான அரபு கொமாண்டோக்களை லெபஞன் ஆதரிப்பதாகவும் லெபஞன் பிரதமர் இப் பேச்சுவார்த்தைகளின் போது தெரிவித்தாராம்.

### சூயஸ் பகுதியில் மோதல்

சூயஸ்கால்வாய்ப் பகுதியில் இஸ்ரேலியத் துருப்புக்களுக்கும் ஐ. அ. கு. துருப்புக்களுக்குமிடையில் நேற்றுப் பலத்த மோதல் ஏற்பட்டது. இஸ்ரேலிய போர் விமானங்கள் இரண்டு சுட்டு வீழ்த்தப்பட்டதாக ஐக்கிய அரபுக் குடியரசு தெரிவித்தது. தங்கள் தரப்பில் சேதம் எதுவுமில்லையென்றும் அது கூறியது.

### லண்டனில் ஆர்ப்பாட்டம்

லண்டனிலுள்ள இஸ்ரேலிய அமெரிக்கத் தூதரகங்கள்முன் நேற்று சுமார் ஆயிரம்மேர் ஆர்ப்பாட்டம்செய்தனர்.

— —

## இன்று தேர்

யாழ்ப்பாணம். செவ்.

கோப்பாய் வடக்கு ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமி கோவில் தேர்த் திருவிழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவிருக்கிறது. நாளை தீர்த்தோற்சவமாகும்.

## 'மலையக மக்களின் நன்றிக்குரியகட்சி'

அல்லைப்பிட்டி, திங்கள்

''சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் இலங்கையைத் தாயகமாகக்கொண்ட இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கோர் வரப்பிரசாதமாகும். தமிழரசுக்கட்சி சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்திலுள்ள சில ஷரத்துக்களைச் சுட்டிக்காட்டி அதை நீக்கி ஒப்பந்தத்தை ஆதரித்த காரணத்திஞல்தான் மலையகத்தமிழர்களும் ஏனைய இலங்கை இந்திய வம்சாவழித்தமிழர்களும் தமிழரசுக்கட்சிக்கு நன்றிசொல்ல கடமைப்பட்டவர்களாகின்றுர்கள்.''

மேற்கண்டவாறு தமிழரசுக்கட்சியின் மலையக தொழிற்சங்கமாகிய இலங்கை தொழிலாளர் கழக பிரமுகரும் இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளருமாகிய இறை. தென்னரசு சுருவில் சனசமூக நிலைய முன்றலில் பண்டிதர் கா. பொ. இரத்தினத்தை ஆதரித்து நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். திரு. வி. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இறை. தென்னரசு மேலும் பேசுகையில், ''1964-ம் ஆண்டு சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தால் இந்திய வம்சாவழி மக்கள் மூன்றரை லட்சம்பேர் குடியுரிமை வாக்குரிமைபெற்ற மக்களாய் மாறும்போது இன்றைய மலையகத்தின் இரண்டு லட்சம் வாக்காளர்களுடன் இணைந்து ஐந்தரை லட்சம் மக்களாயும் வயது வந்த வாக்காளர் விகிதாசாரத்தின்படி ஆறு லட்சமாகவும் மாறும். அதஞல் மலையகமக்களும் வடகிழக்கு மாகாண மக்களும் தோளோடு தோள் சேர்த்து செயல்பட இதுநல்தோர் ஒப்பந்தமாகும்'' என்றுர்.

''திருமலையில் பல்கலைக்கழகம்

## அவர்கள் ஒத்துழைத்திருந்தால் எப்போதோ கிடைத்திருக்கும்''

தாவடி, திங்கள்

''இன, மத, பிரதேசரீதியாக ஒற்றுமைப்பட்டு உரிமைகளுக்காகப்போராடிவரும் ஒரேயொரு கட்சி அகிலஇலங்கைத் தமிழரசுக் கட்சியே. தமிழ்காங்கிரஸ் ஒத்துழைத்திருந்தால் திருக்கோணமலையில் இன்று பல்கலைக்கழகம் இயங்கிக்கொண்டிருக்கும்''

இவ்வாறு கொக்குவில்கிழக்கு தலையாளி வைரவர் கோவில்முன்றலில் நல்லூர்த் தொகுதி தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. இ. மு. வி. நாகநாதனை ஆதரிக்கும் முகமாக நடாத்தப்பட்ட தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசிய முன்னுள் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை கூறிஞர்.

டாக்டர் எஸ். இராசரத்தினம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. கதிரவேலுப்பிள்ளை தொடர்ந்து

(4-ம்பக்கம் பார்க்க)




ளும் கம்போடிய மக்களும் அன்னியோன்னியமாக வாழ் கள் தொடருமென்றும் அது அறிவித்தது.

## அந்நியத்துருப்புக்கள் யாவும் வெளியேற வேண்டும்

கம்போடியாவிலிருந்து அந்நியத் துருப்புக்கள் யாவும் வெளியேற வேண்டும் என்று ஜாகர்த்தாவில் நடைபெற்ற கம்போடிய சம்பந்தமான பதினொரு நாடுகள் கலந்து கொண்ட மகாநாடு கோரியுள்ளது. ஆசிய நாடுகள் பலவும் கலந்து கொண்ட இந்த மகாநாட்டில் கம்போடிய நிலைமை பற்றி விரிவாக ஆராயப்பட்டது. இந்தோசீனுவுக்கான சர்வதேச கட்டுப்பாட்டுக் கமிஷனை மீண்டும் இயங்கச்செய்யவேண்டுமெனவும் மகாநாடு தீர்மானித்தது. இதற்காக இந்தோனேஷியா, ஜப்பான், மலேஷியா ஆகிய மூன்று நாடுகளைக் கொண்ட ஒரு குழுவும் நியமிக்கப் பட்டுள்ளது.

ஜாகர்த்தாமகா நாட்டின் முடிவு குறித்து ஜப்பானும் இந்தியாவும் திருப்தி தெரிவித்துள்ளன.

இந்தோசீனுவுக்கான சர்வதேச கட்டுப்பாட்டுக் கமிஷனில் இந்தியா, கனடா, போலந்து ஆகிய மூன்று நாடுகள் அங்கம் வகிக்கின்றன.




அண்மையில் புலோலியில் கதிரவேற்பிள்ளை கலாமன்ற ஆதரவில் நடைபெற்ற இந்திர விழாவில் கலாவிநோதன் திரு. க. நா. கணபதிப்பிள்ளைக்கு 'வில்லிசை வேந்தன்' என்ற சிறப்புப்பட்டம் வழங்கப்பட்டது. கலாமன்றக் காப்பாளர் திரு. மு. பொ. வீரவாகு பாராட்டுப் பத்திரம் வழங்குவதைப் படத்தில் காண்கிறீர்கள்.

வந்த வாக்காளர் விகிதாசாரத்தின்படி ஆறு லட்சமாகவும் மாறும். அதனால் மலையகமக்களும் வடகிழக்குமாகாண மக்களும் தோளோடு தோள் சேர்த்து செயல்பட இது நல்லதோர் ஒப்பந்தமாகும்'' என்றார்.

''மலையகத் தேர்தல் தொகுதிகளில் முப்பது தொகுதிகளில் ஆட்சிமன்றப் பிரதிநிதிகள் வெற்றிபெற இந்த இரண்டு லட்சம் வாக்காளர்களே முக்கியமாக இருக்கின்றனர்'' என்றார்.

இக்கூட்டத்தில் கா. பொ. இரத்தினம், எம். கே. அந்தனிசில், மட்டக்களப்பு வேட்பாளர் திரு. இராசதுரை உட்பட வேறுபலரும் உரையாற்றினர்.




உங்கள் பருத்தி, ஸிந்தெட்டிக் புடவைகளுக்கு நிலையான மெருகூட்டுவதற்காக, உலகப்பிரசித்திபெற்ற, பெயர் கசெல்லா, நிறம் மங்காத சாயப்பொருள் பசை மற்றும் சுணைப்பொருள்களை வழங்குகின்றார்கள்.

உங்கள் ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட எமது நவீன ஆய்வு கூடச் சேவையை பயன் படுத்திக்கொள்ளுங்கள்.

HAYLEYS

ஹேலிஸ் லிமிட்டெட்

400, டீன்ஸ் ரோட், கொழும்பு-10, தொலைபேசி: 96333.




# கிருமிப் பீடைகள் ஒன்றும் அணுகாது ஒழிந்திட இரு வழிகள்

உங்கள் தாவரங்களைத் தாக்க ஆவலோடு காத்திருக்கின்றன நூற்றுக்கணக்கான புழுக்கள், பூச்சிகள். இத்திட்டத்தை முறியடிக்க முழுநிவாரண, சிக்கனமான, வன்மைமிகு கிருமிநாசினிகள் இரண்டு இன்று நம் கைகளில் உள்ளன.
















என்ட்ரெக்ஸ்' 20 – நெல், புகையிலை, காய்கறி பருத்தி ஆகியவற்றைத் தாக்கும் கிருமிப்பீடைகள் முற்றழிப்பிற்கு நம்பகரமானதென நிலையான, வேளாளர் தெரிவு. (1 திரவ அவுன்ஸ் என்ட்ரெக்ஸ் 20 ஐ, 2—4 கலன் நீரில் கலந்து இலைத்தொகுதியில், 3—4 வாரத்திற்கொருமுறை நன்கு தெளிக்கவும்.

நெல் புகையிலை, அல்லது காய்கறி விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறீர்களா? ஷெல் கம்பனியால் தயாரிக்கப்படும் வன்மை மிகு கிருமிநாசினிகள் 'என்ட்ரெக்ஸ்' 20ம், 'அசோட்றீன்' 60ம் கொண்டு அவற்றை ஒழுங்காகத் தெளித்து கிருமிப்பீடைகளுக்கு முற்றழிப்பு அளித்திடுக.

ஷெல் ரசாயனப் பொருட்கள்

SHELL

ஷெல் இரசாயனங்களை நினையுங்கள். லங்கெம்மை நினையுங்கள்.

அசோட்றின் 60– ஏனைய கிருமிநாசினிகளால் அழிக்க முடியாத கிருமிப்பீடைகளின் முற்றழிப்பிற்கு ஏதுவான ஓர் வன்மைமிகு புதிய, வடிமுறை கிருமிநாசினியாகும். நெல், புகையிலை, காய்கறி, பருத்தி ஆகியவற்றைத் தாக்கும் கிருமிப்பீடைகள் ஒழிப்பிற்கும் சிபார்சு செய்யப்படுகிறது. (1 திரவ. அவுன்ஸ் அசோட்றின் 60 ஐ. 3–5, கலன் நீரில் கலந்து 2–3 வாரத்திற்கொருமுறை தாவரத்தின் இலைத்தொகுதியில் நன்கு தெளிக்கவும்.

## லங்கெம் இலங்கை லிமிட்டெட்

செலிங்கோ ஹவுஸ் த. பெ. 919 கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

எவன் இளமையிலிருந்தே இறைபக்தி உடையவனாக இருக்கிறானோ; அவனே பாக்கியசாலி.
— அன்னை சாரதேவி


# ஈழநாடு

Eelanadu N. tiona: Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Tele hone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் வைகாசி மாதம் 5-ந் திகதி (19-5-70)


## தேர்தல் நாளன்று

வருகிற 27-ம் திகதி தேர்தல் நாளன்று காலை 7 மணிக்கும் மாலை 6 மணிக்குமிடையே ஆஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளிகளைத் தவிர யாரும் கார்களிலோ, சைக்கிள் முதலிய வாகனங்களிலோ செல்லக்கூடாதென்று தடை இருப்பதாக பரவியுள்ள வதந்தி பலருக்குக் கவலையளித்திருக்கின்றது.

வாக்காளரை யாரும் வாகனங்களில் வாக்குச்சாவடிக்கு ஏற்றிச்செல்லக் கூடாதென்றும் அப்படிச் செல்லுவது வாக்காளரை மறைமுகமாக வசப்படுத்துவதாகுமென்றும் கருதியே, தேர்தல் சட்டத்தில் ஒரு புதிய திருத்தம் செய்துள்ளனர். சென்ற பொதுத்தேர்தல்களில் வேட்பாளர் சார்பாக கார்கள் வாக்காளரின் வீடுகளுக்குச் சென்று சிறப்பாக பெண் வாக்காளரை ஏற்றிக்கொண்டு, வாக்குச்சாவடிக்கு கொண்டு சென்று திருப்பிச் சேர்ப்பது பகிரங்க ரகசியம். அவ்விதம் செய்யாவிடில் பல தாய்மார்கள் வாக்களிக்கச் செல்லாமல் வீட்டிலேயே இருந்துவிடவும் கூடும். என்றாலும் செல்வமும் செல்வாக்குமுள்ள வேட்பாளரே அதிக கார்களை இவ்விதம் பயன்படுத்த முடியுமாதலால் இது தகாத காரியம் என்று கருதி இவ்வித புதிய திருத்தத்தை தேர்தல் சட்டத்தில் செய்துள்ளதன் நோக்கமாகும்

''தேர்தல்நாளன்று காலை 7 மணிக்கும் மாலை 6 மணிக்குமிடையே ஆஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளரும், வேறு நியாயமான காரணங்களுக்குச் செல்லுபவர்களையும் தவிர மற்றப்படி பஸ் அல்லது றெயிலைத் தவிர வேறு வாகனங்களில் வாக்காளர் செல்லப்படாது'' என்று புதிய திருத்தச்சட்டம் கூறுகின்றது. ''வேறு நியாயமான காரணங்கள்'' என்று திருத்தச்சட்டம் தெளிவாகக் கூறுவதால், அன்று அறவே வாகனங்களை தடுப்பதாயின் அது பொதுமக்களுக்குப் பல தாகும். பல தொழிலாளரும் ஊழியரும் தங்கள் வேலை ஸ்தலங்களுக்கு சைக்கிளில் பல மைல் தூரம் செல்லுவது வழக்கம் அன்று பகலில் யாரும் சைக்கிளில் செல்லக்கூடாதென்று தடுத்தால், அவர்கள் நிலை எவ்வளவு சங்கடமாகும்?

சட்டம் இயற்றியதின் நோக்கம் தேர்தல்ஊழல்களைத் தடுத்து அதைக் கூடுமானவரை அமைதியாகவும் பாரபட்சமின்றியும் நடத்த வேண்டுமென்பதற்காகவுமேயன்றி பொதுமக்களில் யாரையும் இம்சைக்கு உள்ளாக்கவேண்டுமென்பதற்காக அல்ல. பொதுமக்கள் அன்று கூடுமானவரை வாகனங்களைப் பாவிக்காமல் வாக்குச்சாவடிகளுக்கு நடந்துசென்றே தங்களது தேசிய ஜனநாயகக் கடமையை நிறைவேற்றுவரென்றே எதிர்பார்க்கப்படுகின்றது வாக்காளரில் பலர் நடந்துசெல்லமுடியாமலிருக்கலாம். அவர்களை வாக்குச்சாவடிகளுக்குக் கொண்டுசெல்ல வாகனங்களை பாவிக்கவேண்டியிருக்கும். வேறு அவசர கடமைகளுக்காகப் பொதுமக்கள் சைக்கிள், டாக்ஸி, வான் முதலியவைகளில் அன்று செல்லவேண்டிய அவசரமும் அவசியமுமிருக்கலாம், ஆகவே மேற்குறித்த சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும் பொலீசார், இவ்விஷயத்தில் கண்மூடித்தனமான கடுமையின்றி பகுத்தறிவைப் பயன்படுத்தி அன்று நியாயமான கடமைகளை நிறைவேற்றச்செல்லும் பொதுமக்களுக்கு வசதியீனங்களோ, வீண் தொந்தரவோ இல்லாமல் பார்த்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளனர் ''ஆஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளரையும், வேறு நியாயமான காரியங்களுக்காக வாகனங்களில் செல்ல வேண்டியவர்களையும் தவிர'' என்று சட்டத்தில் கூறியுள்ளதன் நோக்கம், பொதுமக்கள் யாருக்கும் வீண் இம்சை ஏற்படக்கூடா

## ''வகுப்பு வாதிகள் என்பது தவறு''

கொழும்புத்துறை, செவ்.

டாக்டர் என். எம். பெரேரா சமசமாஜக் கட்சியின் தலைவராக இருக்கின்றார். அவர் ஒரு சிங்களப் பிரஜையாக இருக்கின்றபடியால் தமிழ் மக்கள் எங்களைப் பார்த்து ஒரு வகுப்புவாதக் கட்சியின் அங்கத்தவர்கள் எனத் தப்பான அபிப்பிராயம் கொள்கிறார்கள் அது தவறு இப்பொழுதும் வருங்காலச் சந்ததிக்கும் நல்வழி காட்டவே சமசமாஜக கட்சி முன்வந்துள்ளது. தமிழர் ஒன்றுபட்டுச் செயல் புரிந்தால் சம உரிமைகளைப் பெறமுடியும்'

இவ்வாறு நல்லூர் தொகுதியில் இலங்கை சமசமாஜக் கட்சியின் சார்பில் போட்டியிடும் திரு. வ. சச்சிதானந்தம் யாழ். கச்சேரிக்கண்மையில் திரு. ஏ. விஸ்வநாதன் எம். எம் சி. தலைமையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்பேசும்போது கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: தமிழ் தலைவர்களினால் தமிழ் மக்கள் நாளுக்கு நாள் நஞ்சூட்டப் படுகிறார்கள். அவர்கள் மக்களை ஏமாற்றி தமது சுய நலத்திற்காகவே ஆட்சி மன்றம் செல்ல வாக்குரிமை கேட்கின்றனர்.

உரிமைப் போராட்டத்தில் கந்தசாமி என்பவர் தன் உயிரையே பறிகொடுத்துவிட்டார் இவர்களுக்காக அனுதாபப்படுவதா அல்லது ஐந்து முறை தோற்றுவிட்டேன் இனியாவது அனுப்புங்கள் எனக் கேட்கும் அபேட்சகருக்கா?

''23 வருடங்களாகத் தமிழ்த்தலைவர்கள் தமிழ் மக்களைக் கால்பந்தாடுகின்றனர்- தமது தென் இலங்கைத் தோட்டங்களைப் பாதுகாக்கவே அவர்கள் மாவட்ட சபை கோரி மண்கவ்விவிட்டனர் தமிழ்த் தலைவர்கள் யு என் பி.யின் ஆட்சிக்கு அடிபணிந்தவர்களே'' என மல்லிகை ஆசியர் திரு. டொமினிக்ஜீவா இக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இன்று

## சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் தேர்

யாழ்ப்பாணம், செவ்

உளவரும், வணிகரும், கற்றோரும், சிறப்புற்று வாழும் சுதுவைநகர் மத்தியிலே வயல் சூழ அமர்ந்திருக்கும் ஸ்ரீ வனேஸ்வரி அம்பாள் அந்த ஊரிலுள்ள மக்களுக்கு வேண்டியதை ஈந்து நோய் இன்றி வாழ்வித்துவருகிறார்.

ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் வருடாந்த உற்சவம் வருடாவருடம் சிறப்பாக நடைபெற்றுவருகிறது. இங்கு பதினெட்டுநாள் உற்சவம்நடைபெறுகின்றது. கொடியேற்றம் ஆரம்பமாகி பதினறு நாட்களும் திருவிழாக்கள் மிகச்சிறப்பாக நடைபெற்றுவரும், 17-ம் நாள் தேர்த் திருவிழா நடைபெறும். 18ம் நாள் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் உற்சவம்ஆரம்பமாகி இன்று தேர்த்திருவிழா நடைபெறுகின்றது இன்று காலை தொடக்கம் பொங்கல் நடைபெறும். பல அடியார்கள் காவடி எடுப்பார்கள். பிற்பகல் நான்கு மணியளவில் ஸ்ரீ புவனேஸ்வரியம்பாள் தேரில் ஏறி அடியார்களின் அரோகரா கோஷங்களுடனும் பஜனைகளுடனும் வீதிவலம் வருவார். மாலை ஆறு மணியளவில் தேர்த்திருவிழா முடிவடையும். நாளை மாலை ஐந்து மணியளவில் தீர்த்தோற்சவம் நடைபெறும்
—'அடியான்'

## யாருடைய கூப்பன்கள்?

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு அருகாமையில் ஏழு கூப்பன் புத்தகங்களை ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த ஆர். நாகசாமி என்பவர் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் காரியாலயநேரத்தில்வந்து பெற்றுக் கொள்ளவும்.

## ''நாட்டைப் பிரிக்க இடம் கொடோம்''

திருக்கோணமலை, திங்

''தேசிய ஒற்றுமையைத் தாம் இந்த நாட்டில் உண்டாக்கி விட்டதாகக் கூறி வருகிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சியினர் தேசிய ஒற்றுமையை பேச்சினாலும் வெறும் வாய்ச் செற்களினாலும் உண்டாக்கிவிட முடியாது'' என திருக்கோணமலையில் இஸ்லாமிய சோஷலிச கிளையொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் இஸ்லாமிய சோஷலிச முன்னணித் தலைவரும், ஸ்ரீ லங்கா சுந்திரக்கட்சியின் உபதலைவர்களில் ஒருவருமான பதியூதின் முகமது கூறினார்

'சோஷலிச ஆட்சியின் மூலம் தான் ஒற்றுமையைப் பலப்படுத்த முடியும், இந்நாட்டில் முஸ்லிம்களும் தமிழரும் சிறுபான்மையினராக வாழுகின்றார்கள். ஆகவே தான் இந்நாடு பிரிக்கப்படாமல் ஒன்றுபட்டு இருக்க வேண்டுமென்று விரும்புகின்றோம், இந்நாட்டைப் பிரிக்க இடங்கொடுக்கவும் மாட்டோம் முஸ்லிம் இனத்துக்கென்று ஒரு கலை கலாச்சாரம் இருக்கின்றது. அக்கலை கலாச்சாரத்துக்குச் சேவை செய்தவர் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா. அவருடையஅளப்பரிய சேவையினால்தான் முஸ்லிம் சமூகம், கல்வியிலும், அறிவிலும் முன்னேறி இருக்கின்றது. ஸ்ரீலங்கா அரசாங்கம்வந்தால், முஸ்லிம் மக்களுடைய மார்க்கம் இல்லாமல்போகும். கோவில்கள் உடைக்கப்படுமென்றுஅன்று ஐ. தே. கட்சியினர் கூறினர். இனிமேலும் எங்களை அவர்கள் ஏமாற்றமுடியாது.

எங்களுக்குத்தந்த வாக்குறுதிகளை ஐக்கிய தேசியக் கட்சியினர் காற்றில்பறக்க விட்டு முஸ்லிம் மக்களை ஏமாற்றிவிட்டார்கள். இவ்வாறு ஜனாப் பதியுத்தீன் முகமது கூறினார்.

## ''ஐக்கிய இலங்கையை ஏற்படுத்த கூட்டணியே தேவை''

மாவிட்டபுரம், திங்கள்

''சிறிய நாடாக இருக்கும் இலங்கையில் சோசலிச ஆட்சி ஏற்பட்டால் தான் நாம் சுபீட்சமாக வாழலாம் இவ்வாட்சி ஏற்படவேண்டுமானால் அது கூட்டாட்சிக் கட்சிகளினால்தான் முடியும் கூட்டாட்சிக்கட்சி பெரும்பான்மை ஆதரவுடன்தான் அமைக்கமுடியும் தென்னிலங்கையில் உள்ள சிங்கள மக்கள் எம்மாபான்றவர்களை இருகரம் நீட்டிவரவேற்கிறார்கள் ஆகவே இந்த சூழ்நிலையைப்பயன்படுத்தி ஒரு தமிழனை இலங்கை முற்றும் உரிமையுடையவனாக்குவதற்குகு இந்த கூட்டரசாங்கத்தை ஆதரித்து ஐக்கிய இலங்கையை ஏற்படுத்தவேண்டும்''.

இவ்வாறு காங்கேசன்துறையில் போட்டியிடும். திரு. வி. பொன்னம்பலம் தம்மை ஆதரித்து பலாலியில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் கலந்துரையாற்றுகையில் கூறினார்.

திரு சி, சுப்பிரமணியம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் தமிழன் இலங்கைமுழுவதும் உரிமையுடையவனாக வாழவேண்டுமானால் கூட்டாட்சியை ஆதரித்து சோசலிஷ அமைப்பை ஏற்படுத்தி ஐக்கிய இலங்கையை உருவாக்கவேண்டும்' என்றார்.

எமது கூட்டாட்சி இம்முறை தெரிவு செய்யப்பட்டால் எல்லாவற்றையும் தேசிய மயமாக்குவோம். வேலை இல்லாத்திண்டாட்டம் நீங்கவழிவகுப்போம் உங்களால் அனுப்பப்படும் இருகட்சிகளும் டட்லியிடம் தான் மண்டியிடுவார்கள் டட்லி எந்த உரிமையையும் கொடுக்கமாட்டார். இதற்கு கடந்தகால பாராளுமன்றம் எடுத்துக் காட்டாகும். இக்கட்சிகள் இரண்டும் நின்ற இடத்திலேயே நிற்கின்றனவே தவிர எதுவித உரிமையும் பெற்றுத்தரவில்லை'' என்று அவர்மேலும் கூறினார்.

திரு. காராளசிங்கம் மாதகல் செல்லர், டாக்டர் ஏ. அல்பிரட் உடபடப்பலர் உரையாற்றினர்கள்.

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், செவ்

அப்புத்தளைத் தமிழ் மகாவித்தியாலயத்தில் கடந்த இருவருடங்களாக அதிபராகக் கடமையாற்றிய திரு. ஆ. செல்வராசா

வரவேற்பு வளைவில்

## 'சிங்களத்திற்கு உரிய இடம் அளிக்கப்பட்டுள்ளது'
— யாழ்: மேயர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

நாவற்குழியில், அமைக்கப்பட்டிருக்கும் யாழ். மாநகரசபை வரவேற்பு வளைவில் உத்தியோகமொழியான சிங்களத்திற்கு மூன்றாவது இடம்கொடுக்கப்பட்டிருப்பது பெரும்பான்மைச் சமூகத்தினரின் மனதைப் புண்படுத்துமென திரு. ஏ. ஜி. ராஜசூரியர், நேற்று நடந்த யாழ்ப்பாண மாநகரசபைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

திரு. ரி எஸ், துரைராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. இராஜசூரியர், மேற்கண்ட விஷயமாக கேள்வி எழுப்பியபோது சில, அங்கத்தவர்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்தனர்.

அடிப்படை நோக்கங்கள் எதுவுமில்லாது முறையான திட்டத்தின்படியே சபையின் அங்கீகாரத்துடன் இவ்வளைவு அமைக்கப்பட்டதென்று மேயர் திரு. ரி. எஸ். துரைராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நோக்கி வருபவர்களுக்கு அந்த வளைவின் வலபக்கத்தில் சிங்கள மொழி இருப்பதால் அது உரிய இடத்தில் இருப்பதாகத் தோன்றுகிறதென்று திரு. ஏ. எஸ். நடராசா தெரிவித்தார.

இந்த வளைவின் திறப்பு விழா இம்மாதம் 20-ம் தேதி நடைபெறுமென்று மேயர் தெரிவித்தார்.

மக்கள் கமிட்டித் திட்டம்:

## 'சிங்களத் திணிப்புக்கு வழிகோலும்'

வல்வெட்டித்துறை, திங்கள்

'இதுவரை ஆட்சிபுரிந்து வந்த ஐக்கியதேசியக் கட்சியின் முதலாளித்துவ ஆட்சி தமிழ் மக்களின் உரிமைகளை நாளுக்குநாள் பறித்து வந்துள்ளது. அதேபோல் சுதந்திரக் கட்சியினர் சர்வாதிகார அரசியல் எதேச்சாதிகாரத்தை இந் நாட்டில் நிறுவ முன்வந்துள்ளனர். சுதந்திரக் கட்சி இப்பொழுது மக்கள் கமிட்டித் திட்டத்தை வெளியிட்டுள்ளது. அது அக் கட்சியின் கைக்கூலி அரசியல் எதேச்சாதிகாரத்துக்குவழி வகுக்கும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்த மக்கள் கமிட்டித் திட்டம் கட்டாய சிங்கள திணிப்புக்கு வழிகோலுவதாகும் எனவே இத் திட்டத்தைஇ தி மு க வன்மையாக எதிர்க்கிறது' என பருத்தித்துறைத் தொகுதி இ. தி. மு. க. அபேட்சகராகப் போட்டியிடும் திரு ஆ. விசாகரத்தினத்தை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் திரு தயாபரன் பேசும்போது கூறினார்,

திரு ஆ. நடராசா தலைமையில் தொண்டமானாறு சந்திக்கு அண்மையிலுள்ள மைதானத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு உ. நெடுமாறன் பேசுகையில் கூறியதாவது;

அடையாள அட்டை மசோதா தமிழ் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு சட்டமாகும் அச் சட்டம் தமிழ் மக்களுக்கு எப்பொழுதும் இன்னல் விளைவிக்கக் கூடியதாகும். இச் சட்டத்தை தமிழ்க்காங்கிரஸ் தமிழரசுக்கட்சியினர் ஆதரித்துள்ளனர், தமிழ் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட விசேஷ மசோதா ஒரு ஏமாற்று வித்தையாகும். நிலஉச்சவரம்பு, வங்கி தோட்டம் ஏற்றுமதி இறக்குமதி முதலியன தேசியமயமாக்கப்பட வேண்டும்.'

அபேட்சகர் திரு ஆ. விசாகரத்தினம், திராவிட மணி, மணிவண்ணன் ஆகியோரும் பேசினர்.

## ''தோட்டத் தொழிலாளர் நலனில் தொண்டமானுக்கு அக்கறையில்லை''

பேராதனை. திங்கள்

''இந்தோ- இலங்கை ஒப்பந்தம் அமுல் நடாத்தப் களிடமிருந்து அவருக்கு ஆதரவு கிடைக்காது என்பது உண்மை.

# தேர்தல் போட்டி- 1970

இன்றைய

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

புதிய திருத்தச்சட்டம் கூறுகின்றது. ''வேறு நியாயமான காரணங்கள்'' என்று திருத்தச்சட்டம் தெளிவாகக் கூறுவதால், அன்று அறவே வாகனங்களை தடுப்பதாயின் அது பொதுமக்களுக்குப் பல விதங்களிலும் இம்சை தருவமான காரியங்களுக்காக வாகனங்களில் செல்ல வேண்டியவர்களையும் தவிர'' என்று சட்டத்தில் கூறியுள்ளதன் நோக்கம், பொதுமக்கள் யாருக்கும் வீண் இம்சை ஏற்படக்கூடாதென்பதற்காகவே.

## ஜாகர்த்தா தீர்மானம்

கம்போடியாவில் போரை நிறுத்துவது பற்றி ஆலோசிக்க இந்தோனேஷியா கூட்டிய ஜாகர்த்தா மகாநாட்டிலே, இலங்கை, இந்தியா முதலிய நாடுகள் கலந்துகொள்ள மறுத்துவிட்டன. இதற்குத்தக்க காரணமுண்டு. போரை நிறுத்தவேண்டுமென்ற மேலான நோக்கத்திலே இலங்கைக்கு மாறான கருத்து இருக்கமுடியாது. ஆனால் இவ்வித மகாநாட்டினால் ஏதும்பயன் ஏற்படவேண்டுமாயின், அது எல்லா நாடுகளின் நம்பிக்கையையும் மதிப்பையும் பெற்ற, எந்த வல்லரசின் பக்கமும் சாயாத நடுநிலைமை நாட்டினால் கூட்டப்படவேண்டும். அத்தகைய தகுதி இன்று இந்தோனேஷியாவுக்கு உண்டா என்பது முக்கிய கேள்வி.

மேலும் அமெரிக்காவின் ஆதரவை நம்பி ஆட்சிக்கு வந்துள்ள புதிய கம்போடிய அரசாங்கத்தை இலங்கை உள்ளிட்டு பல நாடுகள் இன்னும் அங்கீகரிக்கவல்லை. அப்புதிய ஆட்சியையும் கேட்காமலேயே அமெரிக்கா தனது முப்படைகளையும் கொண்டு கம்போடியா மீது படையெடுத்துள்ளதாக அமெரிக்காவிலேயே பலர் பலமாக ஆட்சேபித்து ஜனதிபதி நிக்ஸனின் இந்த நடவடிக்கையைக் கண்டிக்கின்றனர். தாங்கள் இன்னும் அங்கீகரிக்காத புதிய கம்போடிய அரசாங்கத்தைப் பலப்படுத்தும் முறையிலேயே இம்மகாநாடு கூட்டப்பட்டதால், இதில் தாங்கள் கலந்துகொள்வது முறையாகாதென்றும் அது ஒருதலைப்பட்சமான நடவடிக்கை என்றும் இலங்கை, இந்தியா முதலிய நாடுகள் கருதி இதிலிருந்து ஒதுங்கிவிட்டது சரியேயாகும்.

கம்போடியாவிலிருந்து எல்லா அந்நியத் துருப்புகளும் வெளியேறவேண்டுமென்று ஜாகர்த்தா மகாநாடு செய்துள்ள தீர்மானத்திற்கு சண்டையில் சம்பந்தப்பட்ட நாடுகள் ஏதும் செவிசாய்க்குமா என்பது மிகவும் சந்தேகம். அமெரிக்கா தன் துருப்புகளை வாபஸ்பெற்றாலும் தென்வியட்னாம், வியட்காங், வட வியட்னாம் முதலிய நாடுகள் அவ்விதம் செய்யுமெனத் தெரியவில்லை. தன் துருப்புகளை வாபஸ் பெற்றாலும் தங்கள் கடல், விமானப் படைகள் அங்கு போரில் தொடர்ந்துகலந்துகொள்ளும் என்று அமெரிக்க அதிகாரி தெரிவித்திருக்கிறார். இதையெல்லாம் பார்க்கையில் கம்போடியாச் சண்டை அவ்வளவு சீக்கிரத்தில் முடியுமென்று தெரியவில்லை.

இச்சண்டைக்கு நல்லதோர் தீர்வை சீக்கிரம் காணவேண்டுமாயின், அமெரிக்கா, புதுச்சீனம், ரஷ்யா இம்மூன்று வல்லரசுகளும் கூடிப்பேசி, ஒருமைப்பட்ட முடிவுக்கு வரவேண்டும். அது இந்நிலையில் சாத்தியமானதா?

ஆசிரியருக்கு கடிதங்கள்

## புத சந்தரணம்

9-5-70 ல் நிகழ்ந்த Transit of Mercury நிகழ்ச்சிக்கு புதசந்தரணம் என்ற பெயர் வழக்கிலிருக்கின்றது என்பதை வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவிரும்பினேனேயன்றி ஒரு விவாதத்தையும் நான் தொடக்குவதற்காக எழுதவில்லை.

புதசந்தரணம் அல்லது புதஸந்தரணம் என்ற சொல் பல ஆண்டுகளாக இந்நிகழ்சியைக் குறிப்பதற்கு வழங்கப்பட்டுவருகின்றது. 1937-38க்குரிய ஈசுவர வருஷ திருக்கணித பஞ்சாங்கத்தில் 11-5-1937-ல் நிகழ்ந்த Transit of Mercury நிகழ்ச்சிக்குப் 'புத ஸந்தரணம்' குறிப்பிடப்பட்டு ஒரு விளக்கப் படமும் கொடுக்கப்பட்டுள்ளது.

'ஸந்தரணம்' என்ற சொல் சந்தரணம் என்று திரிந்திருக்கலாம்.

வ. மகாதேவன்,

கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

# தேர்தல் போட்டி-1970

இலங்கையில 7-வது ஆட்சி மன்றத்தின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான பொதுத்தேர்தல் இம்மாதம் 27-ம் திகதியன்று நடைபெறவிருப்பது வாசகர்கள் அறிந்ததே. அதையொட்டி 'ஈழநாடு' ஒரு போட்டி நடாத்த ஏற்பாடு செய்திருக்கின்றது. அரசியற் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களைச் சரியாகக் குறிப்பிடும் வாசகருக்கு முதலாம் பரிசும் ஏறத்தாழ சரியான விடையனுப்பும் வாசகருக்கு 2-ம் பரிசும் அதற்கடுத்த படியான சரியான விடைக்கு 3-ம் பரிசும் வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புகின்றவர்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களை இங்கே பிரசுரமாகும் கூப்பனில் உரிய இடத்தில் எழுதி ''தேர்தல் போட்டி-1970'' ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 26-5-70 க்குப் பிந்தாமல் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும். குறித்த திகதிக்குப் பிந்திய கூப்பன்கள் எக்காரணங்களைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஒருவர் எத்தனை கூப்பன் வேண்டுமானாலும் அனுப்பலாம். நேரே கொடுக்க விரும்புவோர் ''ஈழநாடு'' அலுவலகத் தபால் பெட்டியில் சேர்க்கவும்.

**கேள்விகள்:**

1. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.
2. அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு வடக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.
3. ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.
4. கூட்டணிக்கட்சிக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்

கூட்டணிக் கட்சியுள் அடங்குவன:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ-பீக்கிங்), லங்கா சமசமாஜக் கட்சி என்பன.

5. சுயேட்சையாளர்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எந்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

சுயேச்சைகளுள் அடங்குவன:

தமிழர் சுயாட்சிக் கழகம், இலங்கைத்தமிழர் ஒற்றுமை முன்னணி, சிங்கள சுமாஜனக் கட்சி, இ. கதி,. க.மு கட்சி என்பன.

**பரிசு விபரங்கள் விரைவில் வெளிவரும்**

**'ஈழநாடு' ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.**

### 1970 தேர்தல் போட்டிக் ''கூப்பன்''
### 'ஈழநாடு'

| | |
|---|---|
| இ. த. அ. கட்சி | |
| அ. இ. த. கா. கட்சி | |
| ஐ. தே. கட்சி | |
| கூ. கட்சி | |
| சுயேச்சை | |

பெயர்: ..............................................

விலாசம்: ..............................................

பேசுகையில் தமிழன் இலங்கைமுழுவதும் உரிமையுடை

## இன்றைய பலன்

வைகாசி மீ 5-ம் திகதி

[19-5-70]

**மேஷம்-** பொன்னான வாழ்வு இன்று. கண்ணியம் கடைவிரிக்கும். கடமையும் கிறக்கும்:

**ரிஷிபம்-** கடமையில் தடை ஏற்படும். காலதாமதத்தால் பொருட் செலவு உண்டாகும். பிறர் நம்பிக்கையை தவிர்க்கவும்.

**மிதுனம்-** மேம்பட வாழ்வீர். பிதாவழித்தனமும் கிடைக்கும். நீண்டநாள் ஆசை இன்று பலித்திடும்.

**கடகம்-** தொழில்துறையில் முன்னேற்றம். புகழ் நிதியில் அபிவிருத்தி. நிம்மதி பிறக்கும்.

**சிம்மம்-** எதிர்பார்த்த பணவரவுக்கு இடமுண்டு. பூமியால் இலாபம் புத்திரவழியாலும் நன்மை உண்டு.

**கன்னி-** கடமையில் தடை ஏற்படும். மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்வீர். மதுபானத்தை தவிர்க்கவும்.

**துலாம்-** துன்பத்தின் சாயல் மனதிலே படியும். சிலர் உதவிசெய்யப் போய் உபத்திரவத்தில் மாட்டிக் கொள்ளுவீர்கள்

**விருச்சிகம்-** பெரிய இடத்து அவகாசம் உங்களுக்குச் செல்வாக்கைத் தேடித்தரும். சிலருக்கு அதிர்ஷ்ட லாபமும் கிடைக்கலாம்.

**தனு-** கண்துடைப்பு வேலை நடக்கும். கவனம் செலுத்தவும். பெரியோரைப் பகைத்துக் கொள்ளாமல் பொறுமையை பேணி நடக்கவும்

**மகரம்-** தொழிலாளர்களுக்கு ஊதியத்தில் உயர்வும் மேலிடத்துச் சிபார்சும் கிடைக்கும்.

**கும்பம்-** புத்திர சுகத்துடன் தொழில்துறையில் வெற்றி கிடைக்கும்.

**மீனம்-** எதிரிகள் காத்திருப்பர். ஆயுதபீடைக்கு இடமளிக்கலாம். எதிலும் அவதானம்வேண்டும்.

சோதிடக்கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

யாழ்ப்பாணம், செவ் அப்புத்தளைத் தமிழ் மகாவித்தியாலயத்தில் கடந்த இருவருடங்களாக அதிபராகக் கடமையாற்றிய திரு. ஆ. செல்வராசா கைதடி சி. எம். எஸ். மகாவித்தியாலயத்திற்கு அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## அவர்கள்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பேசுகையில் கூறியதாவது.- '1956-ம் ஆண்டு தமிழ்மக்களை எதிர்கொண்ட இன்னல்கள், துன்பங்கள் என்பவற்றைச் சிந்தனைசெய்த பெரியார்கள், பேரறிஞர்கள், உயர்அதிகாரிகள் ஆகியோரால் தமிழ்ப்பல்கலைக் கழகச்சபை ஆரம்பிக்கப்பட்டது. அரசியல்சார்பற்றவர்களாலேயே இது ஆரம்பிக்கப்பட்டது. அறிவுத்துறைகளனைத்தையும் போதிக்கக் கூடிய பூரணத்துவம்வாய்ந்த தமிழ்ப்பல்கலைக்கழகம் பாடல்பெற்ற திருகோணமலையில் அமையவேண்டுமென தமிழ் மக்களுடைய கல்வி வளர்ச்சியிலே அக்கறை கொண்ட பொதுமக்கள் விரும்பினார்கள்.

1965-ம் ஆண்டுக்குப்பின் தேசியஅரசாங்கத்தின் ஆட்சியில் சகல மதத்தவர்களடங்கிய 18 பேர் சேர்ந்து திருகோணமலையிலேதமிழ்ப் பல்கலைக்கழகம் வேண்டுமெனப் பிரதம மந்திரியிடம் கேட்டோம். தமிழ்க்காங்கிரஸ் கட்சியினர் மூவர்யாழ்ப்பாணத்தில் இந்துப்பல்கலைக் கழகம் வேண்டுமென்றுகேட்டார்கள். இதனால் இதுவிஷயம் கல்விமந்திரியிடம் ஒப்படைக்கப்பட்டு தாமதமேற்பட்டது.

இந்துப்பல்கலைக்கழகப் பிரச்னை கிளப்பாமல் விட்டிருப்பார்களேயானால் இன்று திருகோணமலையிலே தமிழ்ப் பல்கலைக்கழகம் இயங்கிக் கொண்டிருக்கும்'.

இக்கூட்டத்தில், பண்டிதர் திரு. நா. இராசையா, திரு. பற்குணராசா, திரு. பொன்னுத்துரை. திரு. ச. முத்துலிங்கம், திரு. ந. அருணாசலம் உட்படப்பசிலர்பேசினர்.

## இனப் பிரச்னை . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனமானது. பெரியநாடுகளிலும் சரி இலங்கையை விடச் சிறியநாடான சுவீட்சர்லாந்து போன்ற நாடுகளிலும் சரி இனப்பிரச்சினையைத் தீர்க்கும் மருந்தாக சமஷ்டி அரசியல் திட்டமே பின்பற்றப்பட்டு வருகின்றது'' என்றார்.

## தொண்டமானுக்கு அக்கறையில்லை''

பேராதனை. திங்கள் ''இந்தோ- இலங்கை ஒப்பந்தம் அமுல் நடாத்தப்பட்டால் குடியுரிமை அற்ற இந்திய தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவிலோ அன்றி இலங்கையிலோ குடியுரிமை பெற்று வாழவழி கிடைத்திருக்கும். திரு. தொண்டமான் தமது சொந்த நன்மைக்காக தோட்டத் தொழிலாளர்களை தற்போதைய நிலையில் தொடர்ந்திருப்பதையே விரும்புகிறார். எதற்காக டட்லிசேனநாயக்காவும், தொண்டமானும் இந்தோ- இலங்கை ஒப்பந்தத்தை அமுல் நடத்தத் தயங்குகின்றார்கள்?'' என திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தெல்தோட்ட கூட்டணி அபேட்சகரை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

திருமதி சிறிமா மேலும் பேசும் போது கூறியதாவது:-

கடந்ததேர்தலில்மக்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை டட்லி சேனநாயக்கா நிறைவேறறவில்லை. ஆகவே பொதுமக்களிடமிருந்து அவருக்கு ஆதரவு கிடைக்காது என்பதுஉண்மை.

தற்போது மக்கள்கமிட்டி பற்றிப் பொதுமக்கள் மத்தியில் தப்பான அபிப்பிராயத்தை புகுத்தி வருகின்றார். மாக்ஸிஸத்தையும் மக்கள் கமிட்டியையும் இணைத்து அவர் பயங்கர கற்பனை செய்கின்றார்

பொதுமக்கள் இதனை நம்பி ஏமாறமாட்டார்கள். கடந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்ததின்பலனாகப் போதிய கஷ்டத்தை மக்கள் அனுபவித்து விட்டார்கள். தற்போது உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த முடியாது உள்ளது.

உலகச் சந்தையில் ஏற்பட்ட பற்றாக் குறையினால் கூப்பன் அரிசியை வெட்ட நேரிட்டது எனக் கூறினார் டட்லி சேனநாயக்கா. ஆனால் உண்மையில் பற்றாக் குறை என்பது இல்லை. பல்கலைக் கழக மாணவர்களின் உதவிப்பணத்தையும் குறைத்தார்கள்'' என்றும் கூறினார்.

## 'ஏமாற்றியதால் போட்டியிடுகிறேன்'

மாவிட்டபுரம், ஞாயிறு 'தமிழ் மக்கள் உரிமை பெறும் நோக்குடன் தமிழரசு-காங்கிரஸ் கட்சிகளை இதுவரை ஏகோபித்து அனுப்பினர்கள். ஆனால் அவர்கள் மக்களை ஏமாற்றிவிட்டனர் இதனால்தான் நான் இம்முறை தேர்தலில் இறங்கியுள்ளேன்.'

இவ்வாறு உடுவில் தொகுதியில் போட்டியிடும் 20 வயது இளைஞரான கு. விநோதன் தம்மை ஆதரித்து குப்பிளான் கற்கரைப் கற்பக விநாயகர் ஆலயத்துக்குமுன் வெள்ளி இரவு நடந்த பிரசாரக் கூட்டத்தில் கூறினார்.

திரு. ஆர். மயில்வாகனம் தலைமையில் நடந்தஇக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்: தமிழ் மக்களின் உரிமையைப் பெற உயிரைக்கூடத் தியாகம் செய்யத் தயார் என்றார் வட்டமேசை மகாநாடு பற்றி பேசிய ஜீ. ஜீ. பொன்னம்பலம் வட்டமேசை மகாநாட்டை இதுவரை ஏன் கூட்டவில்லை என்று திரு. விநோதன் கேட்டார்.

பண்டிதர் இரா. சுப்பிரமணியம், திரு. தா. சண்முகநாதன், திரு. சிவகுருநாதன் உட்பட பலர் உரையாற்றினர்

## சிறுபான்மை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கோப்பாய்த்தொகுதி வேட்பாளர் திரு. ரி. குணரத்தினத்தை ஆதரித்து நடைபெற்ற தேர்தல்பிரசாரக் கூட்டத்தில், தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினார்.

கோப்பாய் கிராமசபைத் தலைவர் திரு. பரமானந்தராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் மேலும் பேசுகையில்:-

'யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தமிழ் மாணவர்களது பொருளாதார நிலையையும் அவர்களது கல்வி வசதியையும் உத்தேசித்தே இங்கு சர்வகலாசாலை அமைக்கக் கோரினேன். அதுமாத்திரமல்ல சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கென தனித் தொகுதி நிறுவப்படவேண்டுமென 45ல்சோல்பரிக் குழுவினரிடம நானே முதலில் குரலெழுப்பினேன். ஆனால் தமிழரசுக்கட்சி தமிழர்களின் தலைமைப்பீடத்திலிருக்கும்வரை எந்த விமோசனத்தையும் காணமுடியாது' என்றார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு மே மாதம் 19-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org